1429

Regd. No. M. 878.

தொகுதி 10. பகுதி 5-6.

# பூர்ணசந்திரோதயம்.

பிரஹ்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம்
இவைகளைப் பரவச் செய்யும்
ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை

1919ஞு செப்டம்பர்—அக்டோபர்மீ
சித்தார்த்திஞு புரட்டாசி—ஐப்பசிமீ

5 - MAR 1924

| | |
|---|---|
| தற்காலநிலைமை—அர். அரங்கசாமி ஐயர் பி. ஏ. | 129 |
| அன்னை வஸந்தை—செய்யுள் | 136 |
| பிரஹ்மஞானமும் கல்வியும்—மிஸ்கா... | 137 |
| குற்றவாளிகளைச் சீர்திருத்துவதெப்படி— சே. யஸ். இராம... ஐயா | 145 |
| இறைவனுக்குத் தொண்டு செய்வது எப்படி— அன்னிபெஸண்டு | 151 |
| கோபாலகிருஷ்ண கோகலே—வெங்கடரத்னம் | 155 |
| சமாசாரம் | 158, 182 |
| மாதுஸ்ரீ பெஸண்டம்மையார்—வி. ஜினராஜ தாஸர் | 164 |
| சாஸ்திர அதிசயங்கள்—ஆர். ரெ. | 169 |
| மாதுஸ்ரீ பெசண்டம்மையாரும் காந்தியடிகளும் —பஞ்சாப்கேசையர் | 172 |
| அன்னிபெஸண்டம்மையாரைப் பற்றிய ஓர் அறிவிப்பு —எம். சுவாமிநாதையர் | 178 |
| அமெரிக்கா பிரஹ்மஞான சபையின் சுறுசுறுப்பு | 183 |

அ. அரங்கசாமி ஐயர் பி. ஏ., பி. எல். பத்திராதிபர்

ஸ்ரீமத் வால்மீகி இராமாயண வசனம்.

பண்டித நடேச சாஸ்திரியாரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது "அழகும், பெருமையும், எளிமையும் ஒருங்கே வாய்ந்த நடைக்கு இவற்றிற்கு நிகரான வேறு புத்தகங்கள் தமிழ்ப்பாஷையில் மிகச் சிலவேயுள்ளன." மிக விலையுயர்ந்த கனமான ஆண்டிக் காகிதத்தில் அச்சிட்டு நேர்த்தியான காலிகோவில் அழகாய் பயிண்டு செய்திருக்கிறது.

(1) பாலகாண்டம், 244 P. P. (2) அயோத்தியாகாண்டம் 501 P. P.
(3) ஆரணிய காண்டம் 254 P. P. (4) கிஷ்கிந்தா காண்டம் 226 P. P
(5) சுந்தரகாண்டம் 260 P. P. (6) யுத்தகாண்டம் 702 P. P.

6—காண்டமும் சேர்த்து வாங்கினால் ரூபா 12—8—0

...ண்டு ராஜன், புக்ஸெல்லர்ஸ் அண்டு ஜெனரல் ...ஸ், 2 கீழண்டைமாடவீதி மைலாப்பூர்
மெதராஸ்.

...ா அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பெற்றது

# அறிவிப்பு.

இப்பத்திரிகை அச்சிடும் அச்சாபீசில் ஏற்பட்ட அசௌகரியங்களால் இப்பத்திரிகையை இரட்டை சஞ்சிகையாக வெளியிடவேண்டியிருக்கிறது என்றும் தாமும் ஏற்பட்டிருக்கிறது என்றும் மிகவும் விசனிக்கிறோம். மேற்கூறிய தவறுதலை நேயர்கள் பெருமனது செய்து மன்னிப்பார்களாக.

பத்திராதிபர்.

---

| படங்கள். | விலைசரசம். | படங்கள். |
|---|---|---|
| அன்னி பெஸண்டு | | 0—1—0 |
| கர்னல் ஆல்காட் | | 0—1—0 |
| தாமோதர மாவலங்கர் | | 0—1—0 |
| ப. நாராயணையர் | | 0—1—0 |

தபாற்கூலியும் பாக்கிங்கூலியும் வேறு.

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ்,
மதுரை.

---




எல்லோருக்கும் அவசியமானது.
புதுமாதிரியான ஷர்ட்டுகள்.
ஒவ்வொருவரும் வாங்கத் தவறாதீர்கள்.
36-இஞ்சி நீளம்.

இது நேர்த்தியான இங்கிலீஷ் டுவிலில் கை தேர்ந்த தையற்காரரைக் கொண்டு தற்கால பாஷன்படி சிப்பிப்போத்தான்கள் வைத்துத் தைத்தது ஷர்ட் 1-க்கு ரூபா 2; டசன் ரூ. 23 கீர்த்திவாய்ந்த காகி டுவில் ஷர்ட்கள். இது அற்புதமான காகி கலரில் வெகுநேர்த்தியாய்த் தைத்திருக்கும். ஓர்முறை வாங்கினால் மறுமுறை வேறெந்த ஷர்ட்டும் வாங்கப் பிரியமிராது. ஷர்ட் 1-க்கு ரூபா 2-8-0; டசன் ரூபா 29. கழுத்தின் சுற்றளவு தெரியப்படுத்தவும்

வி. பி. மணி அண்டு கோ,
10, வைத்தியநாதமுதலி தெருவு,
சவுக்கார் பேட்டை, மதராஸ்.

ஸ்ரீ ராமஜெயம்.

# புது ஜவுளிக்கடை நோட்டீஸ்.

# மு. ரா. பெருமாளய்யர்

## மேலக்கோபுவாசல் தெரு, மதுரை.

---

மதுரை மேலக்கோபுரவாசல் தெரு டோர் நிம்பர் 113, தென்சரகில் முன் டிப்டி கலெக்டராயிருந்த மகா-ா-ஸ்ரீ ராமாராயரவர்கள் பெரியமாடி கிரஹத்தில் ஏற்படுத்தியிருக்கும் ஜவுளிக்கடையில் அநேக ஊர்களிலிருந்து வரும் பட்டுச்சேலை, சித்தாடை, பாவாடை, ரவிக்கைகளும், பட்டுக் கரையிலும், சாதாவிலும், ஜரிகையிலும், வேஷ்டி ஜோடி துப்பட்டா, தினுசுகளும், உள்ளூரில் தயாராகும் ஜரிகை சாதா, டோரியா, சுன்னடி, சேலை, சித்தாடை, ரவிக்கை தினுசுளும் 150, 200 நிம்பர் நூலில் ஜரிகைஜோடி, துப் பட்டாக்களும், சாயவேஷ்டி, தினுசுகளும் இன்னும் அநேக ஜவுளி தினுசுகளும் விலை சலீசாகவும் நயமான ஜவுளிகளாக வும் சொற்பலாபத்திற்கு விசேஷ வியாபாரம் செய்து கொண்டு வருகின்றமையால் தேவையானவர்கள் எங்கள் ஜவுளிக்கடைக்கு வந்து வேண்டிய தினுசுகளை வாங்கிக் கொள்வீர்களென்று எதிர்பார்க்கிறோம்.

☞ N. B.—அயலூர்களிலிருந்து கடிதமூலமாய் வரும் ஆர்டர்களை உடனே கவனித்து அதிக பந்தோபஸ்தாய் வி. பி. பார்சல் மூலமாய் ஜவுளி தினுசுகள் அனுப்பக் கூடும். எங்கள் ஜவுளி விலை விபர ஜாப்தா (கேட்லாக்) வேண்டுமானால் இனாமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

## வைத்யரத்ன பண்டிட் டி. கோபாலாசார்லு அவர்களின் சிறந்த ஆயுர் வேத ஔஷதங்கள்.

நன்ருகப் பரீட்சிக்கப்பட்டது !

சென்ற இருபத்தைந்து வருஷங்களாக எல்லோராலும் உபயோகிக்கப்பட்டது !!

### பிளேக் மருந்து.

1. எல்லாவித பிளேக் ஜ்வரங்களுக்கும் ஸஞ்சீவினி இதுவே.
2. முன் சாப்பிட்டால் பிளேக் வியாதியை வாாமல் தடுக்கும்.

விலை பெரியசெட் ரூ 2—2—0
,, சிறிய ,, ரூ 1—6—0

### ஜீவாமிருதம்.

1. ஹிந்து தேசத்தில் நல்ல மூலிகைகளாலும் உலோகங்களாலும் தயார் செய்யப்பட்டது
2. ஆரோக்கியத்தையும் தைரியத்தையும் உண்டாக்கும்.
3. பலத்தையும் உத்ஸாகத்தையும் விர்த்தியாக்கும்.

விலை பெரிய சீசா ரூ 3—4—0
,, சிறிய ,, ரூ 1-12—0

### காலரா மருந்து.

1. இந்த ஔஷதத்தினால் காலரா விலகிப்போகும்.
2. சீக்கிரத்தில் வாந்தியையும் பேதியையும் போக்கும்.

விலை பெரிய செட் ரூ 1—2—0
,, சிறிய ,, ரூ 0-12—0

### அமிருதாமலக தைலம்.

1. வித்யார்த்திகளுக்கும் யோசனை ஜாஸ்தியுள்ளவர்களுக்கும் அதிக உபயோகமானது
2. நேத்திர ரோகிகளுக்கும் சிரோ ரோகிகளுக்கும் ரொம்பவும் ஹிதமானது.

விலை பெரிய புட்டி ரூ 1—0—0
,, சிறிய ,, ரூ 0—8—0

பலவித வியாதிகளுக்கும் இவ்விடத்தில மருந்துகள் கிடைக்கும். கார்டொக்கு இனமாக அனுப்பப்படும்.
தபால் சார்ஜும், பாக்கிங் கூலிகளும் பிரத்தியகம்.
வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு
எழுதிப் பெற்றுக்கொள்ளவும்:—

மானேஜர்,
ஆயுர்வேதாசிரமம்,
55, ஆச்சாரப்பன் தெருவு,
மதராஸ்.

# இந்தியாவில் மிகப்பெரிதும் பழமையுமான வைத்யசாலை எது?

1881-ஹூம் ஜாம்நகரில் ஸ்தாபிக்கப்பட்ட

# ஆதங்கநிக்ஹர ஔஷதாலயம்.

குழந்தைகளுக்கு சகலரோகங்களேயும் குணப்படுத்தும்

சஞ்சீவி

**பாலமித்ர**

300 மாத்திரை

கொண்ட டப்பி

1-க்கு ரூபா 1

வியாதியைப்பற்றி விபரமாய்தெரிவிப்போக்கு நன்ருய் ஆலோசனைசெய்து திருப்தியான விடை கொடுக்கிருேம்.

கடிதங்களுக்கு உடனே பதில எழுதப்படும்

இந்த

ஔஷதாலயத்தில் விருத்த வைத்திய பாரங்கதரும், வித்தியா பட்டம்பெற்ற மேதாவிகளும், சாஸ்திர சம்பன்னர்களும் திறமை வாய்ந்த அதிகாரிகளுமாக நூற்றுக்கணக்கான ஜனங்கள் உத்தியோகம் செய்கிருர்கள்.

முதன்மையான

மருந்து சென்ற 35 ஹூகாலமாய் உபயோகிப்போருக்கு அற்புத குணத்தைக் கொடுத்து தேகபலத்தையும் மனோவன்மையையும் கொடுத்துப் பெரும்புகழ் படைத்திருக்கிற ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள

32 மாத்ரையின் விலை ரூ 1

வைத்திய சாஸ்திரி

மணிசங்கர் கோவிந்தஜீ

ஆதங்க நிக்கிரக்

ஔஷதாலயம்

45, மேலக்கோபுர வீதி

மதுரை.

இருமல், கபம்

காசம் இவைகளுக்கு சிறந்தமருந்து

**காசாந்தக**

மாத்ரைகள் டப்பி 1க்குவிலை ரூ 1

இதுவரை எங்கள் கேட்லாக்கை பார்த்திராவிடில் உடனே உங்கள் விலாசத்தை எழுதுங்கள் எவ்வித செலவில்லாமலும் இனமாய் அனுப்புகிருேம்

## படங்களுடன் கூடிய கதைகள்.

சுகிர்லாபம்—அல்லது நட்பின் மேன்மை 0—2—0
சிவாஜிமஹாராஜ் } ஆர். எஸ். நாராயணசாமி 0—2—0
குமணராஜன் — } ஐயர் பி. எல். 0—2—0

## அரிய ஞானக் களஞ்சியங்கள்.

### ஒவ்வொன்றும் 1 அணா.

விக்கிரஹாராதனை
லோககுருவின் அவதாரங்கள்
ஹிந்து என்பவன் எவன்
காயத்திரி
காயத்திரி ராமாயணம்
மகாலயபக்ஷமும் நவராத்திரியும்
அன்னிபெஸண்டம்மை சரித்திரம்
ஷை செய்யுள்
எண்ணங்களின் ரகசியம்
திருப்பள்ளி எழுச்சி-செய்யுள்.
லோககுருவாகிய பரமன் வருவானேன்

### ஒவ்வொன்றும் இரண்டணா

சன்மார்க்க முறையில் ஹிதோபதேசம்
தியாஸபியால் உள்ள பிரயோஜனங்கள்
சர்வசமயத்தைப்பற்றியும் ஸ்ரீ கிருஷ்ணனைப்பற்றியும் சம்பாஷணை
மரணபயம் வேண்டாம். சன்மார்க்கதீபம்

### ஒவ்வொன்றும் மூன்றணா

(1) என் குருநாதன் என்னை ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது
(2) ஸ்தூலப்பிரபஞ்ச தர்மங்கள்.—ஆத்மதர்மங்கள்
(3) மோக்ஷம் அல்லது வீடு பெறல்
(4) ஸன்மார்க்க முறையும் ஸம்ஸாரமும்
(5) ரிஷிகள் அல்லது மகாத்மாக்கள்
(6) நமது பெரும் துரவஸ்தை
(7) கர்மநாசம் (8) சின்னங்கள்.

தியானக்கிரம விஷயம் 0—4—0
ஹிந்து மததூஷணையின் பரிகாரம் 0—4—0
உதாஸீன ஸாது ஸ்தோத்திரம் 0—6—0
பிராசீன தர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும் ஷை
கல்விகற்பித்தல்—ஈசுவர கைங்கரியம் 0—8—0
மனிதன் வம்சாவளியின் உண்மை 0—8—0
பிரஹ்மஞான விசாரத்தால் நமக்குறும் பயன்யாது 0—9—0
எனது பிரதிஜ்ஞை—வி. ஜினராஜதாஸர் 0—12—0
யோக உபந்யாஸங்கள்—அன்னிபெஸண்டு 0—12—0

தபால் சார்ஜ் வேறு. பூர்ணசந்திரோதயம் ஆபீஸ் மதுரை.

# பூர்ணசந்திரோதயம்.

| தொகுதி 10. | சித்தார்த்தி௵ புரட்டாசி-ஐப்பசி௴<br>1919௵ செப்டம்பர்-அக்டோபர்௴ | பகுதி 5-6. |
|---|---|---|

## தற்கால நிலைமை.

---

உலகத்தில் இன்னும் குழப்பம் அடங்கவில்லை. உலகத்தில் சமாதானம் நிகழவில்லை. யுத்தம் முடிந்து விட்டது என்பது வாஸ்தவம் தான். ஆனால் ஜன சமூகமானது ஸம நிலைக்கு வரவில்லை. உலகமெங்கும் கொந்தளிப்பு உண்டாய்க் கொண்டிருக்கிறது. இங்கிலாந்தில் ஜன சமூகக் குழப்பம் அடிக்கடி காணப்படுகின்றது. இன்று ரயில்வே வேலைக்காரர் வேலை நிறுத்தம், நேற்று இஞ்ஜினீயர்கள் வேலை நிறுத்தம், நாளை நிலக்கரி வேலைக்காரர் வேலை நிறுத்தம். இவ்வாறு அடிக்கடி பத்திரிகைகளில் படிக்கிறோம். ஆனால் அங்கே யிருக்கும் ஜனங்கள் எவ்வளவு கஷ்டப்படவேண்டி வரும் என்று கொஞ்சம் ஆலோசனை செய்து பாருங்கள். எவ்வளவோ சுறுசுறுப்பாய் வேலை நடக்கும் நகரங்களில் ரயில் வண்டிக்காரர்கள் வேலை நிறுத்தம் செய்தால் எவ்வளவு துன்பம் உண்டாகும், எவ்வளவு காரியம் நஷ்டமாகும்! எத்தனை பேர் கருதிய காரியத்தை முடிக்க முடியாமல் மயங்குவர்! ஆனால் இதுவெல்லாம் தெரியாமலா வேலை நிறுத்தம் செய்கிறார்கள்? இல்லை, இவ்வளவு கஷ்

டம் நேரிடும் என்று தெரிந்துதான் அப்படிச் செய்கிறார்கள். ஏன்? பொது ஜனங்கள் கஷ்டப் பட்டால் பொது ஜனங்களுடைய பிரதிநிதிகளால் நியமிக்கப் பட்ட அரசாங்காத்தார் பொது ஜனங்களுடைய கஷ்டத்தை நீக்குவதற்காக அவசியம் அதற்காக வேலை நிறுத்தம் செய்வோரைக் கூப்பிட்டு அவர்கள் குறைகளைக் கேட்டு அவைகள் நீங்கும் முறைகளை அரசாங்கத்தார் நீக்குவார்கள். இத்திண்ணத்தால் தான் வேலை நிறுத்தங்கள் ஏற்படுகின்றன,

***

அரசாங்கத்தாரிடம் தங்கள் குறைகளைத் தெரிவிக்கும் போது வேலைக்காரார்களின் பிரதிநிதிகள் தலை வணங்கித்தெண்டனிட்டு, மனமுறிந்து, ஏங்கித் தயங்கி, யாசிக்கிறார்களாவென்று உன்னுவோம். இல்லை. தலை நிமிர்ந்து, கௌரவத்துடன், சமத்துவமான எண்ணத்துடன் தான் தங்கள் உரிமைகளைக் கேட்கிறார்கள். தாங்கள் வேலை செய்யாவிடின் உலகமே நடக்காது என்பது அவர்களுக்குத் தெரியும். அரசாட்சியாரும் தங்களைப் போன்றவர்களால் நியமிக்கப் பட்டவர்கள் என்பதும் இவர்களறிவார்கள். தாங்கள் கேட்கும் பரிகாரங்களோ நியாயமானவைகள் என்பதையும் அவர்கள் உணர்கிறார்கள். ஆகையால் சம பாவத்தை வகித்துத்தான் பேசுகிறார்கள். வேலைக்காரர் தம்முடைய சங்கசக்தியையும், ஒற்றுமையின் பெருமையையும் அறியாமல் ஒருகாலத்திலிருந்தார்கள். அப்போது அவர்களை முதலாளிகளும், அரசாங்கத்தாரும் அவமதித்து அவர்களுடைய குறைகளை நீக்க அவ்வளவு சீக்கிரம் முன் வராதிருந்தார்கள். ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக அனுபவத்தினால ஞானத்தை யடைந்து வேலையாட்கள் ஒன்று சேர்ந்து பொதுப்பணத்தைச் சேர்த்து அதினின்று வேலை நிறுத்தக்காலததில் உதவும்படி செய்து கொண்டார்கள். வேலை நிறுத்தம் செய்வதும் வேலைச் சபையோர் கூடித்தீர்மானித்துச் செய்கிறார்கள். ஆகையால் வேலை நிறுத்தத்தால் பொது ஜனங்களுச்கும் முதலாளிகளும் விசேஷமாய்

கஷ்டமடைகிறார்களே யொழிய, வேலையாட்கள் அவ்வளவு துன்ப மடைகிறதில்லை. சுருங்கச் சொல்லின், வேலை நிறுத்தம் என்பது வேலையாட்கள் முதலாளிகளுடனும் அரசாங்கத்தாருடனும் செய்யும் யுத்தம். எவ்வாறு யுத்தம் புரிபவன் முன்னாகவே சன்னத்தம் செய்து கொண்டு தனக்குச் சௌகரியமான சமயத்தில் யுத்தம் செய்ய ஆரம்பிப்பானோ, எவ்விதம் தனக்கு என்ன பரிகாரம் வேண்டும் என்றும், அதை இக்காலத்துக்குள் கொடுக்க வேண்டும், இல்லையானால் நான் யுத்தம் செய்வேன் என்று பயமுறுத்தி அப்பால் யுத்தம் தொடங்குவானோ அவ்வாறே இந்த யுத்தமும் நடக்கின்றது.

***

இவர்களுக்கு எதிர் கக்ஷியில் யார் என்றால், முதலாளிகள். அவர்கள் பணத்தின் பெருமையால், கூடுமான மட்டில் தொழிலாளிகளிடம் இருந்து எவ்வளவு வேலை வாங்க முடியுமோ அதை வாங்கத் தீர்மானங் கொண்டுள்ளார். ஒரு ரூபாய் கூலி கொடுத்தால் அதற்கு இரண்டு நாள் செய்யக் கூடிய வேலையை ஒரே நாளில் செய்யும்படி செய்தால் அதனால் வரக்கூடிய லாபம் அதிகமல்லவா? அவ்வதிக லாபத்தினால் முதலாளி தனக்கு வேண்டிய சுகம், கௌரவம், பௌருஷம் முதலியவற்றைத் தேடலாம் அல்லவா? ஆகையால் முதலாளிகள் எண்ணம் என்னவென்றால், தொழிலாளிகளுக்குக் குறைந்த சம்பளம் கொடுக்க வேண்டும் நிறைந்த வேலைவாங்க வேண்டும் என்பது. ஒரு பெரிய தொழிற்சாலையிருக்கிறது. அதில் 20,000 கூலியாட்கள் வேலை செய்கிறார்கள். சிலர் சிலநாளைக்கு வேலைக்கு வரவில்லையானால் அவர்களுக்கு அத்தினங்களுக்குச் சம்பளம் இல்லை. வியாதினால் அவர்கள் வரமுடியவில்லையென்றாலும் அப்படித்தான். மனிதனுக்கு மனிதன் வித்தியாசம் செய்ய முடியாது. முதலாளிக்கோ லாபம் குறையக்கூடாது. ஆகையால் வேலைக்காரர் கஷ்டப்படுகிறார்களே யென்றால் அதற்கு நாம் என்ன செய்யலாம். அது என்னுடைய சம்பந்தமில்லை என்று சொல்லி விடுகிறார், முதலாளிகளின் மானேஜர்.

முன் காலத்திலோ வென்றால், ஒரு முதலாளியிடம் சில வேலையாட்களிருந்தார்கள். ஒருவருக்கொருவர் நேரில் சம்பாஷிப்பது உண்டு. ஒருவருக்கொருவர் சுக துக்கங்கள் சௌகரியா சௌகரியங்கள் இவைகளை விசாரிப்பதுண்டு. ஆகையால். தொழிலாளி வியாதியாய் விழுந்தால் முதலாளி அதற்குதவுவது முண்டு, சில நாள் வாராததற்குக் கண்டிப்பாய் சம்பளம் பிடிக்கிற தென்றால் மனம் ஒவ்வாது. சுருங்கச் சொல்லின், இருவருக்கு மனுஷ சம்பந்தம் ஏற்பட்டிருந்தது. ஆனால் இக்காலத்திலோ முதலாளிக்கும் கூலியாளுக்கும் சம்பந்தம் மனிதனுக்கும் யந்திரத்துக்கும் உள்ள சம்பந்தமே யொழிய, மனிதனுக்கும் மனிதனுக்கும் உள்ள சம்பந்தம் இல்லை ஒருவருக்கொருவர் அடையாளம் கூடத்தெரியாது. ஒரு பெரிய முதலாளி யிருக்கும் தொழிற் சாலையிலேயே இப்படி யிருக்குமானால் பல சிறு முதலாளிகளாகச் சேர்ந்து ஒரு பொது மானேஜரைப் வைத்து வேலை வாங்கும் தொழிற் சாலையில் மேற் கூறிய சில்லரை முதலாளிகளுக்கும் ஒவ்வொரு வேலை யாளுக்கும் ஒரு விதமான சம்பந்தமும் கிடையாதெனலாம்.

***

ஆகையால் முற்காலத்தில் சிலர் கொடிய வன்மனதுள்ளவர்களாயிருந்தும் பெரும்பாலும் முதலாளிக்கும் தொழிலாளிக்கும் ஏற்பட்ட சம்பந்தமானது மனுஷ சம்பந்தமானதால் தாங்கக் கூடியதாயிருந்தது. இக்காலத்துக்கு இயல்பான பெரிய தொழிற் சாலைகளில் அவ்வித சம்பந்தம் போய் விட்டதால் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் ஒவ்வொரு கஷ்டத்திற்கும் நிவாரணம் ஏற்பட வேண்டியது இயல்பாகையால், அந்நிவாரணமானது மேற் கூறிய யுத்தத்தின் மூலமாக ஏற்பட்டு வருகிறது. தொழிலாளிகள் ஒன்று சேர்ந்து வேலை நிறுத்தம் செய்து முதலாளிகளுக்கு மர்மஸ்தானமாகிய இலாபத்தை அழிப்போம் என்கிறார்கள். முதலாளிகள் ஒன்று சேர்ந்து தொழிலாளிகளுக்கு உயிர் நிலையாகிய சம்பளங்களையே ஒழிப்போம் என்கிறார்கள்.

இருபேரும் சண்டை செய்ய, இருபேருடைய சம்பந்தம் உள்ளவர்களும், மற்றொரு திருஷ்டியில், இரண்டிலும் சம்பந்தப் படாதவர்களுமான பொது ஜனங்கள் சொல்லொணக் கஷ்டங்களுக்குட் படவேண்டியிருக்கிறது.

***

பேதபுத்தியே இவற்றிற்கெல்லாம் காரணம். வேலையாட்களும், முதலாளிகளும், பொது ஜனங்களும் சகோதரர்களே. அதாவது ஒரே தன்மையுடையவர்கள். ஜனசமூகம் என்ற முழுதிற்கும் ஒவ்வொருவரும் இன்றியமையாத அங்கங்கள் என்று உணர்வார்களாயின், இச் சண்டை நிகழாது. எங்ஙனம் ஒரு அங்கமானது மற்றொரு அங்கத்தோடு தான் மேல் என்று சண்டையிடத் தொடங்கினல் தனக்கும் எதிரிக்கும் இரண்டுக்கும் மேலான அங்கிக்கும் துன்பம் நேரிடுமோ அதுபோல் இப்போதும் கஷ்டங்கள் நேரிடுகின்றன. ஆனல் இந்த வேற்றுமைப் புத்தியிருக்கும் வரை யுத்தம் நடந்தே தீரும். ஆனல் யுத்தத்தால் யாதொரு நன்மையுமில்லையென்று சொல்வதற்கில்லை.

***

இங்கிலாந்திலும் ஒரு நாளைக்கு 12-மணிகாலம் தொழிற்சாலைகளில் வேலை நடந்து வந்தது. இப்போது 8-மணிகாலம் தான்வேலை. தொழிலாளிகளுக்குப் பள்ளிக்கூடங்கள் வைத்தியசாலைகள், அவர்களிருப்பதற்கு தகுந்த சிறுவீடுகள், இவைகளெல்லாம் சட்டமூலம் தொழிலாளிகளுக்குக் கிடைத்திருக்கின்றன. மேலும் அவர்களுக்குக் கிடைக்கும் சம்பளமும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. மேற்கூறிய சௌகரியங்கள் போதாதென்று தொழிலாளிகள் வாதாடுகிறார்கள். அதற்காகத்தான் வேலை நிறுத்தம். அவர்கள் சொல்வதில் மிகுந்த நியாயம் இருக்கின்றது. தொழிலாளிகள் இல்லாவிடில் முதலாளிகளுக்கு வரும்படியேது, லாபம் ஏது? முதல் என்பது தொழிலின் பயன தானே. மேலும் தொழிலாளி

யும் ஒரு ஜீவாத்மா தானே? அவனுக்கு அறிவை விருத்தி செய்யவும், சரீரத்திற்கு ஹிதத்தைத் தேடவும், மனதுக்கு உல்லாசமான கலைகள் முதலியவைகளை அப்பியசிக்கவும் அவசியம் உண்டல்லவா? அவைகளை அடையவேண்டுமானால் சம்பளம் அதிகமாக வேண்டும், சாவகாசமும் அதிகமாக வேண்டும். முதலாளிக்கு எப்படி சௌகரியங்களும் வஸதிகளும் உண்டாயிருக்கின்றனவோ, அம்மாதிரியே தொழிலாளிக்கும் வேண்டுமல்லவா? மேலும் இருவரும் ஸரிஸமானமானவர்கள் தானே. ஒருவன் கொடுத்து மற்றவன் கைநீட்டி வாங்குவானேன், என்றிவ்விதமான ஆக்ஷேபணைகள் தொழிலாளிகளின் மனதில் தோன்றுகின்றன. இவ்வித ஆக்ஷேபணைகள் தோன்றினால், அவைகள் நீங்கும் வழி ஒன்றே அதாவது, தொழிலாளி தன் உரிமையையும் தன் கௌரவத்தையும் அடையவேண்டியது தான். அவ்வாறு தான் இக்காலத்தில் நடந்து வருகின்றது.

***

யுத்த முடிவில் நிகழ்ந்த உடன் படிக்கைகளில் உடன் படிக்கையில் சேர்ந்த தேசங்கள் எல்லாவற்றிலும் தொழிலாளிகளுடைய நிலைமையைப்பாதுகாப்பதற்காக ஒரு நிரந்தர ஸார்வதேசியக் கமிட்டி யொன்றை நியமித்திருக்கிறார்கள். சீக்கிரத்தில் அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் ஸார்வதேசியத் தொழிற் கான்பரன்ஸ் ஏற்படப்போகின்றது. அதற்கு இந்தியா உள்பட உலகத்திலுள்ள நாகரீகமுள்ள நாடுகள் எல்லாவற்றினுமிருந்து பிரதிநிதிகள் அனுப்பப் பட்டிருக்கின்றனர். இவைகளால் தொழிலாளிகளின் நிலைமையானது வரவர மேன்மையடையும் என்று தோன்றுகிறது. இங்கிலாந்திலும் தொழிலாளிகளின் பிரதிநிதியாகிய ஸ்ரீ பார்ன்ஸ் என்றவர் மந்திரிகளில் ஒருவராயிருக்கின்றனர். முன் ஸ்ரீ ஹெண்டாஸன என்ற ஒருவர் மந்திரிகளில் ஒருவராயிருந்தார். இனி சீக்கிர காலத்தில் தொழிலாளிகளின் பிரதி

நிதி முதன் மந்திரியாயும் வருவார் என்றும் சொல்லப்படுகின்றது. தொழிலாளிகளின் பிரதிநிதிகள் தொழிலாளிகளின் அபிவிருத்தியை மட்டும் நாடுகிறவர்களாயிராமல் பொதுவாக உலகமெங்கும் சுதந்திரமும் க்ஷேமமும் பெருவதற்கு ஏற்றபடி பெருமனத்தாராக யிருப்பதாகத் தோன்றுகிறது.

***

அமெரிக்காவில் நடக்கப்போகிற மேற்கூறிய தொழிற் கான்பரன்ஸ் முதலிய கூட்டங்கள் தொழிலாளிகளுடைய மேம்பாட்டை நாடுவதற்கு யுத்தமுறையைத் தவிர சமாதான முறையில் தேடலாம் என்பதற்கு அத்தாட்சியாகும். எதைச்சமாதானமாயும், ஒற்றுமையாயும் செய்ய இயலுமோ, அதை சச்சரவு, போட்டி, வேற்றுமை மூலமாய்ச் சாதிப்பது மதியீனம் என்பது வெளிப்படை. ஆகையால் மேற்கூறிய சமாதான முறைகள் ஜயம்பெறுமாக!

***

தொழிற் கட்சியாரின் தலைமையில் பெருத்த எண்ணமும் உயர்ந்த லக்ஷ்யமும், தீர்க்க திருஷ்டியும் படைத்தபோறிவாளர் அமைந்திருப்பது உலகத்திற்கு க்ஷேமகரமானது. தொழிலாளிகளின் ஐஹிக லாபத்தையும், பணவருவாயையும் மட்டுமே யவர்கள கொண்டவர்களாயிருப்பின், அவர்கள் மூலம் உலகத்துக்குக் கேடேயொழிய வேறில்லை. ஆனால் அங்ஙனம் குறுகிய பார்வையுள்ளவர்களாய் அவர்கள இல்லை யென்பது இங்கிலாந்தில் சப்டம்பர் மீ தத்தில் கூடிய ஸார்வதேசீய தொழில் மதம் இவை சம்மந்தமான கூட்டத்தில நிகழ்ந்த தீர்மானங்களினின்றும், உபந்நியாஸங்களினின்றும், தெரியவருகின்றது. ஸார்வதேசப்பிரதிநிதிகளும் இந்தியத் தொழிற் பிரதிநிதியான ஸ்ரீ பி. பி. வாடியாவும் வந்திருந்தனர். தொழிற்றலைவர்களனேகர் மதத்திற்கும் தொழிலுக்கும் உள்ள சம்பந்தத்தைப்பற்றி யெடுத்துரைத்தார்கள்.

ஆர். அரங்கசாமி ஐயர்.

(161-வது பக்கம் பார்க்க)

# அன்னை வஸந்தை.

வந்தேமாதரம் வந்தேமாதரம்
அருமையும் பெருமையும் அமையயர்லாந்தில்
அவதரித்தாங்கே அருந்ததி போலாய்
மக்கட்பேறெலா மாசையிற் பெற்றும்
மானிட வாழ்க்கையில் மதிமயங்காது
மேற்படு தத்துவ வேதாங்க ளாய்ந்திங்
கேற்படு முண்மை ஹிந்து மதமென
மக்கள் தங்கணவர் வாஞ்சையொழித்து
தன்னைப்போலுந் தரணியிலுள்ளோர்
தத்துவமறிந்து தாமுய்யுமாறு
தேசங்கடோறும் சென்றுமே யுரைத்தும்
ஏசுமதத்தி னெழும்பொருள் விரித்து
ஆசுகள் நீங்கும் அருமறை நிறுத்தியும்
வீசுபுகழ்பெறு வெண்கலை மாதே—பின்பு
அரசாக்ஷி முறையின் அருங்குறைகாட்டி
தருசாக்ஷி ஈதெனத் தருமநூலோதி
ஊன்று முறைமையில் உறுங்கேடுதாழ்வையும்
மூன்று மாதமும் முழுமையிற் றுங்கியும்
இராகுவுநீங்கிய இராமனும்மதிபோல்
பராவியபுகழால் பாரெலாம் வேண்ட
காங்க்ரஸ் மாசபை காரியத்தலைமை
ஓங்கிடப்பெற்றுங் குருகிடப் பேசியும்—மேல்
சுயஆளுகையலால் நயவாழ்விலையென
அபரா முயற்சியிலாடு பம்பரம்போல்
வெளிப்போயுலாவி வீசுங்கால்போல
தெளிவாயெடுத்துத் தெரிதரச்செப்பியும்
அருளை முனதாக்கிப் பொருளையுஞ்சேர்த்து
இருளைப்போக்கிட எழுஞ்சுய தீபமே
அனிபெஸண்டம்மையே நின்புகழ்
ஆயிரவருடமாயினு நிற்குமே
வந்தேமாதரம் வந்தேமாதரம்.

# பிரஹ்மஞானமும் கல்வியும்.

---

(120 ம்பக்கத் தொடர்ச்சி)

எண்ணங்களைப் புகட்டவேண்டும் என்று சிறிது முன் கூறினோம். அதனால் பகுத்தறியும் சக்தியை யுடைய மனதைப்பற்றிக் கூறவில்லை. பிரஹ்மஞான சபையார் தாழ்ந்த மனது அல்லது காம மனது என்று கூறுகிறார்களே அதைத்தான் கூறுகிறோம். வெளிப் பிரபஞ்சமாகத் தனக்குப் புறம்பே தோன்றும் உலகத்தைப் பற்றியதும் மனோ விகாரங்களால் சம்பந்திக்கப்பட்டிருக்கிறதும் காம மனதின் சுபாவம். காரிய காரணங்களை ஆலோசிப்பது என்ற அறிவானது இக்காலத்துக்கு உரியதல்ல. அது தன்னறிவு வந்த பருவத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு உரியது. அது தான் மூன்றாவது அல்லது யௌவன பருவம். சுத்த மனது அல்லது மேல் மனதின் சுபாவமானது மேற்கண்டபடி ஆலோசிக்குந் தன்மை. ஆனால் மேற்கூறிய மூன்று பருவங்களுக்குரிய காலத்தைக் கண்டிப்பாய் வரையறுக்கமுடியாது. ஒன்றிற்கொன்று கொஞ்சம் சம்பந்தப்பட்டே இருக்கும். பாலியத்தில் முதற்கூறிய சுபாவமும், வயது அதிகப்பட அதிகப்பட மூன்றாவது காலத்திற்குரிய சுபாவங்களும் காணப்படும். இப்போது இம்மூன்றாவது காலத்திற்குரிய குணங்களைப்பற்றி விசாரிப்போம்.

யௌவன பருவத்தின் ஆரம்பத்தில் யுவாவானவன் ஒரு சமயம் வெகு உற்சாகசாலியாகவும், மற்றொரு சமயத்தில் திடீரென்று சோர்வுடையவனாகவும் இருக்கிறான். பகுத்தறியும் சக்தி இன்னும் உண்டாகவில்லை. தன்னினைவு மட்டும் மிகுந்திருக்கின்றது. கொந்தளிப்புள்ள ஏரியில் அலையும் சுக்கானில்லாத படகைப் போன்றிருக்கிறான். மனோவிகாரங்களால் அவன் அறிவு அமுக்கப்படுகின்றது. ஆனால்

வர வர அறிவினால் மனோ விகாரங்களை அடக்கியாளப் பழகிக் கொள்வான். உபாத்தியாயரிடத்தில் பக்தியுடன் பணிந்து நடப்பதாலும், இலக்கியப்பயிற்சியாலும், சரித்திரப் பயிற்சியாலும், அவனுடைய மனோ விகாரங்கள் சுத்தப் படுத்தப்படுகின்றன. தத்துவ சாஸ்திரபாகம், தத்தம் மதத்தின் மானஸ சாஸ்திர பாகம் தற்காலத்திய ராஜரீகக் கிளர்ச்சி, ஆசார சீர்திருத்தக் கிளர்ச்சி இவைகளிலும், உயர்ந்த கணித சாஸ்திரம் முதலிய விஷயங்களிலும் அவன் புத்தியானது செல்லும். அவனுக்குப் புலனாகும் விஷயங்களால் கட்டுப்படாத கோட்பாடுகளை அவன் அவலம்பிப்பான். பொருள்களைச் சரியானபடி உற்று உணர்ந்து மதிக்க வல்லவனல்லன். உபாத்தியாயர் தான் கொண்டிருக்கும் தீர்மானங்கள் அல்லது கொள்கைகளை அம்மாணாக்கனை அனுஸரிக்கும்படி சொல்லக்கூடாது. அவனுக்கு உத்திசவு இடும் பருவம் தாண்டிவிட்டது. ஆனால் அவன் எந்த சங்கத்தில் அல்லது சபையில் அங்கத்தானாகச் சேர்ந்திருக்கிறானோ அந்த சங்கம் அல்லது சபை சம்பந்தப்பட்டமட்டில் அவன் உத்தரவுக்குக்கட்டுப்பட்டுக் கீழ்ப்படிய இணங்குகிறான். தான் அச்சபைக்கு அங்கத்தான் என்ற உணர்வை அவன் அறியும் பருவம் வந்துவிட்டது. அச்சபையின் நலத்தை தன் நலமாய்ப் பார்க்கிறான். இந்தப் பருவத்தில் தன் நினைவு அதிகமாகிறதோடு, சங்கத்தின் அங்கபாவத்தை அறியும் சுபாவம் உண்டாகிறது என்பது கவனிக்க வேண்டிய விஷயம். ஆகையால் உபாத்தியாயர் மேற்கூறிய அங்கபாவம் என்ற உணர்ச்சியைக்கொண்டு, தன் நினைவு என்ற குற்றத்தைத் தவிர்க்க முயலவேண்டும். இவ்வயதில் மாணாக்கர்களும் மாணவிகளும் சங்கங்களில் சேரப் பிரியப்படுகிறார்கள். அந்தப் பிரியத்தை மெச்சி அவர்களைப் பள்ளிக்கூடம், அல்லது கல்லூரி, வகுப்பு, பந்தடிக்கும் கூட்டம், அல்லது ஆராமச் சங்கம், முதலிய சங்கங்களின் பொறுப்பை, சொந்தக்காரியங்களைப் போல் பாவிக்கும்படி உற்சாகப்படுத்தவேண்டும்,

இந்தவயதில் உபாத்தியாயர் மூத்த சகோதரன் அல்லது புத்தி சொல்வோன் மாதிரி ஒழுகவேண்டும். பகுத்தறிவு உண்டாகும்படி மாணுக்கனைப் பழக்கவேண்டும். விஷயங்களைச் சீர்தூக்கிப் பார்க்கவும், அவைகளை உள்ளபடி மதிக்கவும், கற்பிக்கவேண்டும். வஸ்துக்களின் தாரதம்மிய அறிவை உண்டாக்கவேண்டும். சிற்சில சமயங்களில் மாணுக்கன் அற்ப விஷயத்தை மலையாய்ப் பாவித்து பிரமாதமாக வருந்துவான். அப்போது உபாத்தியாயர் "இது சிறு விஷயம். அதை மிகப் பெரிதாய் நினைக்காதே" யென்று சொல்லவேண்டும். மற்றொரு சமயம் பையன் கவலையீனமாகவாவது, திருத்தக் குறைச்சலாகவாவது ஒரு காரியத்தைச் செய்தால், உபாத்தியாயர் "இதுவெகு சிறிய விஷயமாய்த் தோன்றினும், அப்படி நினைக்காதே. இது பெரும் தவருக்கும். அதை திருத்தவேண்டியது முக்கியமாகும்" என்று கூறவேண்டும். இந்த தாரதம்மிய உணர்ச்சியை உண்டு பண்ணுவதற்கு, வியாஸங்கள் எழுதுவதும் சர்ச்சைகள் நடப்பதற்கு முன்னல் இந்த இந்த விஷயங்களைப்பற்றி இந்த வரிசையாய்ப் பேசவேண்டும் என்று முன்னலேயே யோசனை செய்து ஆயத்தம் செய்வதும், தக்க சாதனங்களாகும் மேலும் இலக்கியங்களைப் படிப்பதில் ஒரு அத்தியாயம் அல்லது அதன் பாகத்தை வாசித்து அதனுள் அடங்கியிருக்கும் பற்பல கருத்துக்களை பிரித்துச் சேர்க்கப்பழகலாம். இப்படிப் பழகுவதால் மனதை பண்படுத்தப் பழகுகிருன். ஒரு தோட்டத்தை சமதளம் பண்ணி, களைகளை வெட்டி, தண்ணீர் பாய்ச்சி, சாகுபடி செய்வது போல, மனமாகிற தோட்டத்தையும் இவன் சீராக்குவான், உண்மைக்கு மிச்சமாயும் மிதமிஞ்சியும் பேசும் சுபாவத்தை உபாத்தியாயர் கண்டிக்கவேண்டும். சாஸ்திர விஷயம், ஜனசார விஷயம், மானஸ தத்துவ விஷயம், எல்லா விஷயங்களையும், உபாத்தியாயர் மாணுக்கனோடு சர்ச்சை பண்ணிப் பேசவேண்டும், ஆனல் தன்னுடைய அபிப்பிராயத்தை மாணுக்கனை ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்

தக்கூடாது. ஏன் என்றால், மாணாக்கனாயிருக்கும் ஜீவனுடைய பரிபக்குவத்தையும் முதிர்ச்சியையும் உபாத்தியாயர் அறிவதெப்படி? தற்காலத்தில் அந்த ஜீவன் உபாத்தியாயருக்குக் கொஞ்சம் குறைய சமானமான ஸ்திதியிலிருக்கிறான். இனிமேல் அவன் அவரை மிஞ்சிவிட்டாலும் விடலாம். ஆகையால் அந்த ஜீவனுக்கு மேலடைய பக்குவத்தை அறிதல் முடியாது. ஆகையால் உபாத்தியாயர் தன் தீர்மானங்களை ஏற்றுக்கொள்ளும்படி மாணாக்கனை வற்புறுத்தக்கூடாது.

இப்பருவத்தில் ஒரு பெரிய அபாயம் ஒன்று உண்டு. அதை கவனமாய் விலக்கவேண்டும். அதாவது சிறுவனாவது சிறுமியாவது சோம்பேறித்தனமாய் இருக்கக்கூடாது. ஏன்என்றால், இக்காலத்தில் தான், தான் ஆண் அல்லது பெண் என்ற நினைவு வருகிறது. அந்த தன் நினைவினால் அநேகர் கெட்டுப்போய்விடுகிறார்கள். சரீரம், மனது, இரண்டும் சீர்குலைந்து போய் விடுவதும் ஸஹஜமாயிருக்கிறது. எந்நேரமும் சுறுசுறுப்பாயிருக்கவேண்டும். படிப்பும், அது முடிந்த உடன் விளையாட்டும் தயர்ந்து இருக்கவேண்டும். சரீரமும் மனமும் எப்போதும் முயற்சி செய்துகொண்டேயிருக்கவேண்டும். பகற் காலத்தில் வேலையில்லாமல் மனோராஜ்யம் செய்வதைப் போல் கெடுதலான வழக்கம் வேறு ஒன்றும் இல்லை. ஸ்திரீபுமான்கள் விஷயமாய் உபாத்தியாயர் சுத்தமானதும் அனுதாபமுள்ளதுமானபடி உரையாடினால் மாணாக்கர்கள் பயனடைவார்கள். அப்படிச்செய்வதினால் மாணாக்கர்கள் ஒருவர்க்கொருவர் ரகசியமாயும் அசுத்தமாயும் சம்பாஷணை செய்ய நேரிடாது. அப்படி நேரிட்டாலும், அதனால் விளையக்கூடிய தீங்குகள் உண்டாகாது. இப்பருவத்தில் தான், ஸ்திரீ அல்லது பூமானான ஜீவனுடைய வாழ்நாளின் உற்சாகமும், சக்தியும் வெளிக்கிளம்பும் சமயம். இந்தக்காலத்தில் தான் அந்த ஜீவன் புத்திசாலித்தனமாக உபாத்தியாயர் அல்லது தாய் தகப்பன் மாரால் பாதுகாக்கப்பட்டால் நன்றாய்த் தன்னுடைய

நடத்தையைக் காப்பாற்றிக் கொள்வான். அல்லது ஒருவருடைய கவனமும் புத்திமதியும் இல்லையானால் நடத்தை பிசகி வாழ் நாளையே பிரயோஜனமற்றதாய்ச் செய்து கொள்வான்.

இப்போது உபாத்தியாயரைப் பற்றிச் சிறிது சிந்திப்போம். அவர்கள் கடமையைப்பற்றியும் விசாரிக்கவேண்டியதவசியமாகும். மேற்கூறியவற்றினின்று மூன்று வகையான உபாத்தியாயர் வேண்டுமென்று தோன்றுகிறதல்லவா? அல்லது ஒரு உபாத்தியாயரே மூன்று விதமான பருவ மாணாக்கர்களுக்கு ஏற்ப மூன்று விதமாகத் தன்னுடைய நடத்தையை மாற்றவல்லவராயிருக்கவேண்டும் என்று ஏற்படுகிறது. பால்ய வயதில் இருக்கும் மாணாக்கனைப் பாதுகாக்க உபாத்தியாயர், அமைதியும் சாந்த குணமும் வாய்ந்தவராயிருக்கவேண்டும். பாலர்களுக்கு படபடப்புள்ளவர்களும், தீவிரமான பார்வையும், தீவிரமான மனோவிகாரங்களும், அருவருப்பை யுண்டாக்கும். குழந்தையை உற்சாகப்படுத்துவதாக சில வயதுசென்றவர்கள் பிரயத்தினம் செய்யும்போது குழந்தை பயந்து ஓடிப்போவதைப் பார்க்கிறோம். அதனால் அநேகர் கூட அக்குழந்தையின் பயத்தைப்பற்றி ஆச்சரியமும் வருத்தமும் படுகிறார்கள். சிற்சில சமயத்தில் குழந்தையை சீக்கிரத்தில் அதிமேதாவியாய்ச் செய்துவிடவேண்டும் என்று முயலும் தகப்பன் அல்லது மன அமைதியில்லாதவரும் தீவிரமான மனோவிகாரங்களையுடையவருமான தாயாரைக்காட்டிலும், சாதுவாயும் அமரிக்கையாயும்உள்ள நல்லவழக்கங்களையுடைய வேலைக்காரியிடம் குழந்தை யிருப்பது இக்குழந்தைக்குநலம்.

இதை விடப் பெரிய குழந்தைகளைப் பாதுகாக்கும் உபாத்தியாயர் உறுதியான கட்டுப்பாடுள்ளவராயும் குறிப்பிட்ட விதிகளை அனுஸரிப்பவராயுமிருக்கவேண்டும். ஆனால் அக்குழந்தைகளை எப்போதும் சந்தோஷமும் அன்பும் சூழ்ந்திருக்கும்படி வளர்க்கவேண்டும். கண்டிப்பான கட்டுப்பாடு அவசியம் எனினும், அன்பு, சந்தோஷம் இரண்டும்

இல்லாவிடில் குழந்தைகள் நன்றாக வளர முடியாது. ஒரு மரம் அல்லது செடி வளர்வதற்கு சூரியனுடைய பிரகாசம் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் குழந்தைகளுடைய வளர்ச்சிக்கு அன்பும் ஆனந்தமும்.

அதற்கு மேற்பட்ட பருவத்தில் யுவா அல்லது யுவதிக்கு உபாத்தியாயர் அல்லது உபாத்தினியானவள் மூத்த சகோதரன் அல்லது சகோதரி போலிருக்கவேண்டும். உதவி செய்கிறவராகவும், புத்திசொல்லுகிறவராகவும், அனுதாபப்படுகிறவராகவும், நல்ல ஒழுக்கமும் தன்னடக்கமும் உடையவர்களாகவும், தன்னுடைய சுத்தமான, மேன்மை பொருந்திய நடத்தையால் மாணாக்கர் அல்லது மாணவிக்கு ஒரு வழிகாட்டி போலுமிருக்க வேண்டும்.

பிரஹ்மஞானத்தினின்று வேறு ஒரு விஷயத்தையும் நாம் அறிந்து கொள்ளுகிறோம். சாதாரணமாக ஜனங்கள் நினைப்பது என்னவெனில், நாம் செய்யும் செய்கைகளும் கூறும் வார்த்தைகளும் தான் மற்றவரைப் பாதிக்கும என்றும் நம்முடைய எண்ணங்களும், உணர்ச்சிகளும் நமக்குச் சம்பந்தமேயொழிய, பிறரைப் பாதிக்காவென றும் எண்ணுகிறோம். ஆனால்நம்முடைய ஊனக்கண்களுக்குப்புலப்படாத ரஹஸ்யங்களை ஆராய்ச்சி செய்தெழுதிய பிரஹ்மஞான நூல்களைப் படிப்பதிலிருந்து நம்முடைய எண்ணங்களும் உணர்ச்சிகளும் இஸ்தூல உலகுக்கு மேற்பட்டதும் நுண்ணியதுமான உலகங்களில் நிகழும் செய்கைகளே என்றும் அவைகளால் நாம் பிறரை உதவி செய்யவாவது கெடுதி செய்யவாவது நேரிடுகிறது என்றும் அறிகிறோம். எண்ணமானது நுண்ணிய திரவியத்தின் ஸ்புரணமாகையால் ஒரு விதமான ஸ்புரணத்தால் அதை நிகர்த்த ஸ்புரணங்களை ஆகர்ஷிக்கிறோம். அதாவது நல்ல ஸ்புரணங்களால் அவை போன்ற நல்ல ஸ்புரணங்களையும் கெட்ட ஸ்புரணங்களால் அவைபோன்ற கெட்ட ஸ்புரணங்களையும் இழுக்கிறோம். ஒரு ஜீவன் நிமிஷந்தோறும் மற்ற ஜீவர்களோடு

இவ்வித ஸ்புரணங்களால் கொடுக்கல் வாங்கல் செய்து கொண்டிருக்கிறான். ஒவ்வொருவனும் தன்னருகில் வரும் ஜீவர்களுக்குத் தன்னுடைய எண்ணங்களாலும் உணர்ச்சிகளாலும் நல்லது அல்லது கெட்டதான பிரயோஜனத்தைச் செய்து கொண்டிருக்கிறான். ஒவ்வொரு ஜீவனுடைய சூக்ஷ்ம சரீரங்களும் அவையுடன் சம்பந்தப்படும் ஸ்புரணங்களால் மாற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகையால் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிஷமும், குழந்தைகளோடு பழகும் உபாத்தியாயர் குழந்தைகளுடைய சூக்ஷ்ம சரீரங்களை எம்மட்டில் வேற்றுமைப்படுத்தமுடியும் என்பது வெளியாகவில்லையா? வயது முதிர்ந்தவர்களின் சூக்ஷ்ம தேகங்களைக் காட்டிலும் குழந்தைகளின் தேகங்கள் மாறுதலுக்கு ஏற்றவையாகவும், மென்மையானவையாகவும் இருக்கின்றன. ஆனது பற்றியே முற்காலத்தில் குருக்கள் தங்கள் சீடர்களை தம் பக்கத்திலேயே இருத்திக்கொண்டு அவர்களுடைய சூக்ஷ்மதேகங்களை அனுதாபத்துடன் சம்பந்தித்துத்தாக்குதலாலேயே, சீடர்களை நல்வழிப்படுத்தினார்கள். சற்பிணையினால் மட்டுமல்ல.

இன்னும் முக்கியமான வேறு ஒரு விஷயத்தையும் கூறிவிட்டு, இந்த வியாஸத்தை முடிவு செய்வோம். உங்கள் குழந்தை உங்களுடைய சொந்தமான சொத்தல்ல. சிறிது காலம் உங்களுடைய பாதுகாப்பில் வைக்கப்பட்ட ஜீவர்கள் என்று கருதுங்கள். ஸ்தூல தேகத்தைத் தவிர அவர்களுடைய மற்ற தேகங்களும் அவர்களும் உங்களுக்கு பாத்தியப்பட்டதல்ல. இந்த உயர்ந்த உண்மை பிரஹ்மஞான சபையின் தத்துவங்களைப்படித்தறிந்தவர் அல்லாதவரும், குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்கும் விஷயத்தில் மிக்கத்தேர்ந்தவர் என்று மற்றவர்களால் அறியப்படாதவருமான ஒரு பெரியவர் கூறுகிறதோடு ஒத்திருக்கிறது. மஜ்ஜீனி என்ற இத்தாலியா தேசத்துப் பெரியார் குடும்பத்திற்குச் செய்யவேண்டிய கடமை என்ற விஷயமாய் இத்தாலியாவில் ஒரு வேலையாளுக்கு எழுதும்போது கூறுவதாவது;

"கடவுள் உனக்கு அனுப்பியிருக்கும் குழந்தைகளை நேசி. அந்த நேசமானது உண்மையானதும் ஆழ்ந்ததும் கண்டிப்பானதுமான நேசமாயிருத்தல் வேண்டும். புத்திக்கு ஏற்காததும், அசட்டுத்தனமானதும், கண்தெரியாததுமான அன்பு கூடாது. அதனால் அவர்களுக்குக் கெடுதல

சம்பவிக்கும். மேலும் அது உண்மையான அன்பாகாது உன்னுடைய சுயநயப் பிரியமேயாகும். இனிவரும் தலைமுறையின் பாது காப்பானது கடவுளால் உன்னிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிற தென்பதை ஒருக்காலும் மறக்காதே. அப்பொறுப்பை விட மிகுந்த உத்தரவாதமான பொறுப்பு வேறு ஒன்றும் கிடையாது. உன் குழந்தைகளை எவ்வளவு ஆசைப்படுவது எவ்விதம் சுகத்தைப் பேணுவது என்று கற்பிக்கக்கூடாது அவர்கள் கடமைகள் யாது, அக்கடமைகளைச் செய்யவேண்டிய நியாயம் என்ன, என்ற விஷயங்களை அறியும்படி செய்யவேண்டும்."

மேற்கூறிய வற்றால் விளங்குவது யாதெனின் சகோதரர்களான ஜீவர்களை உதவி செய்வதைக் கடமையாக உள்ளவன் உபாத்தியாயர். எப்படி சாவகாசமாக மாலுமியானவன் கப்பலை வெட்டவெளியான சமுத்திரத்தில் சுக்கானைப்பிடித்துத் திருப்பிக்கொண்டு போவானோ அம்மாதிரியாகவே, பால்யம், கௌமாரம், யௌவனம் என்ற துறைமுகத்திலிருந்து மானிடப்பருவம் என்ற வெட்டவெளியான நடுச்சமுத்திரத்திற்குக் குழந்தைகளை சாவதானமாய்க்கொண்டு செல்லும் மாலுமியாவார் உபாத்தியாயர். அவரும்இந்த ஜன்மயபோய் மறுஜன்மம்எடுக்கும்போது பால்ய, கௌமார, யௌவன பருவங்களில் இதைப் போலவே வேறு துணையை அபேக்ஷிப்பார். ஆகையால் இவன் எவ்வாறு உதவி செய்கிறானோ அவ்வாறே உதவியும் அவனுக்கும கிடைக்கும்.

பிரஹ்மஞானத்தால் கல்விகற்பித்தலின் மாட்சிமை இத்தகையது என்று இவ்வாறு அறிகிறோம். சாஸ்திர ஆராய்ச்சியாலும், லோக அனுபவத்தாலும், இயற்கையறிவாலும் தீர்மானம செய்யபபட்ட மேற்கூறிய கற்பனைகள் மிகவும் பயன் தரத்தக்கன. உலகத்தின் விகாஸமுறையோடு ஒத்திருப்பதால் இம்முறைதான் மிகவும் சிலாக்கியமானதாகும்.

மிஸ்காட்,

(நியூ இந்தியாப் பத்திரிகையில் எழுதியதின் மொழிப்பெயர்ப்பு.)
ஆர். அரங்கசாமி ஐயர்.

## குற்றவாளிகளைச் சீர்திருத்துவ தெப்படி?

---

(128-ஆம் பக்கத்தொடர்ச்சி)

பிறவிக்குணத்தாலே குற்றங்கள் செய்கிறவர்களைச் சீர் திருத்துவதெப்படி?

இப்போது தண்டனையடைந்த குற்றவாளிகளுக்கு அவர்களடைபட்டிருக்கும் ஜில்லாக் காராகிரகங்களிலும் பல ஜில்லாக்களுக்குப் பொதுவா யமைந்திருக்கும் மத்திய காரா கிரகங்களிலும் ஜமக்காளம், துண்டுகள் நெய்தல், கயிறு திரித்தல் முதலான பல கைத்தொழில்களை அநேகமாய்க் கற்றுக்கொடுக்கிறார்கள். கைதிகள் ஜெயிலை விட்டு வெளி யேறி வரவும், ஜெயிலில் தாம் கற்றதொழிலைச் செய்து பிழைப்புக்கு வழிதேடிக்கொள்ளத்தக்க தொழிற் சாலைகளுமில்லை. ஜனங்களும் ஜெயிலிலிருந்து வந்தவனை நம்பி வேலை கொடுக்கவும் மாட்டோம் என்கிறார்கள். இது சரியல்ல என்பது, ஒவ்வொரு மனிதனிடமும் ஈசுவர சைதன்யம் இருக்கிறதென்பதைஅறிந்தவர்களுக்குத்தெரிந்தவிஷயமே. குற்றம் நிறைந்த இப்பிரபஞ்சத்தில், ஒவ்வொரு மனிதனிடமும் சற்குணமும் தீயகுணமும் கலந்தே கிடக்கின்றன. ஞானிகள் தவிர மற்றவர்களில் ஒருவரையாவது முழுதும் நல்லவனென்றும் கெட்டவனென்றும் சொல்லமுடியாது. இதற்கோர் சிறிய திருஷ்டாந்தம். திருநெல்வேலி ஜில்லா தென்காசித் தாலூகாவிலுள்ள ஒரு கிராமத்தில் கக்ஷிபால் கிராம முன்ஸீபைக் கொன்றுவிடுகிறதென்ற தீர்மானத்துடன், அரிவாளை எடுத்து அவரை வெட்ட ஓங்கின ஒருவனைப் பாாதது, கிராமமுன்ஸீபின் பெண்சாதி, தன் கணவனை வெட்டாமல் தன்னை வெட்டும்படி சொல்லி மேற்படியான் கையைப் பிடிக்க, பெண்பால் வார்த்தையைக் கேட்டு மனமிரங்கி அக்கிராம முன்ஸீபைக் கொல்லாமல் விட்டுவிட்டான். இது சமீபத்தில் நடந்த விஷயம். இதனால் கெட்ட எண்ணமுடையவனுங் கூட சமயத்தில் அதை விட்டு நல்ல எண்ணம் கொள்ளக் கூடுமென்று அறிகிறோம்.

அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் முதல் தடவை தண்டனையடைந்த குற்றவாளிகளைச் சில கனவான்கள் தங்கள் வீட்டிற்குக் கூட்டிப் போய் தங்கள் பிள்ளைகளைப் போல் பாராட்டி அவர்களுக்குப் புத்தி கூறி நாளடைவில் சீர்படுத்தி வருகிறதாகத் தெரியவருகிறது. அவ்விதம் நம் தேசத்தாரும் செய்து வரவேண்டும்.

தண்டனை அடைந்து ஜெயிலில் அடைபட்டிருக்கும் கைதிகளுக்கு நல்ல உபதேசங்கள் செய்து அவர்களை நல் வழிப்படுத்தலாம். சமீபத்தில், சேலம் ஜில்லா ஜெயிலில் அடைபட்டிருந்த ஒரு வாலிபன், நமது சகோதரர் முத்து ஸாமி அய்யாவர்களது நல்ல உபதேசத்தால் நல்வழிப்பட்டு ஜெயிலிலிருந்து வெளி வந்ததும், உபாத்தியாயர் வேலையில் அமர்ந்திருப்பதாகக் கேட்க எவ்வளவு திருப்திகரமாக இருக்கிறது! ஒரு தடவை நான் புதுக்கோட்டை ஜெயிலுக்குப் போயிருந்த காலத்தில் சில தினங்களுக்குள் விடுதலையாகக் கூடிய இருவர்களைக் குறிப்பிட்டு அவர்களுக்கு நற்போதனை செய்யவேண்டுமென்று மற்றக் கைதிகள் என்னிடம் சொல்ல, அவ்விதம் அவ்விருவர்களையும் தனித்து அழைத்து சில நற்போதனைகள் செய்து, அவர்கள் மனதிலுள்ளதை மறைக்காமல் அறிவிக்கும்படி கேட்க, ஒவ்வொருவனும் தனக்குக் கல்யாணமாக வேண்டிய முறைப் பெண்ணை வேறொருவனுக்கு விவாகம் செய்து கொடுத்து விட்டபடியால், தான் ஜெயிலைவிட்டு வெளியேறிப் போனவுடன் அது விஷயமாகக் கலகம் பண்ண எண்ணங்கொண்டிருப்பதாக அறிவித்தான். அவ்விருவர்களுக்கும் பொதுவாக அப்படிச் செய்வது சரியல்லவென்று சில திருஷ்டாந்தங்களுடன் விவரமாய் எடுத்துக் கூறிய பிறகு தாங்கள் நினைத்தபடி கலகத்துக்குப் போகிறதில்லையென்று எனக்கு வாக்களித்தார்கள். அவர்கள் வாக்களித்தபடியே, சமாதானமாய் இருந்து வருகிறார்களென்று தெரியவருகிறது.

15 வயதிற்குட்பட்ட சிறுவர்களான குற்றவாளிகளை சீர்திருத்த பள்ளிக்கூடங்கள் ராஜாங்கத்தில் ஏற்படுத்தி

யிருக்கிறார்கள். அவர்களுக்கு சன்மார்க்க விஷயமாகக் கல்வி கற்பிக்கப்பட்டு வருவதுடன் பல கைத்தொழில்களும் கற்பிக்கப்படுகின்றன. 15 வயதுக்கு மேல் 21வயதிற்குட்பட்டவர்களுக்கும், அவ்விதம் கல்வி கற்பித்தல் நலம்.

விகாச முறையில் மிருக ஜன்மத்திலிருந்து மனித வர்க்கத்துக்குப் புதிதாக வந்தவர்களுக்குப்பழைய மிருக ஸ்வபாவங்கள் மாற அநேக ஜன்மங்கள் செல்லும் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். அவர்களுக்கு தர்மாதர்ம விவேகம் இன்னும் ஏற்படவில்லை. இப்படிப்பட்டவர்களைக் கண்டறிந்து, அவர்களைப் பிரத்தியேகப்படுத்தி, தனிமையான தீவு போன்ற இடங்களில் வைத்து ராஜாங்கத்தார் மேல் பார்வையில் அவர்களுடைய தன்மைக்குத் தக்க கல்வி கற்பிப்பது அவசியம். அவர்கள் பிழைப்புக்குத் தக்க வழிகளையும் ராஜாங்கத்தார் ஏற்படுத்தவேண்டும். அப்படியானல் உழைப்பின் கௌரவம் இன்னதென்று நாளடைவில் அவர்கள் தெரிந்துகொள்வார்கள்.

அதுவுமன்றி ஓரே ஜன்மத்தில் தங்கள் மிருக ஸ்வபாவத்தை விட்டு நல்வழிக்கு வராவிட்டாலும் பல ஜன்மங்களில் சீருக்கு வந்து விடுவார்களென்பதில் ஸந்தேகமில்லை. இது ராஜாங்கத்தார் முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயம்.

விகாச முறையில் மிருக வர்க்கத்திலிருந்து மனித வர்க்கத்துக்கு வந்து வெகு காலமானலும், நீதி முறை தெரியாதவர்கள் நீதி முறை தெரிந்தவர்களுடன் கலப்பதினல் அவர்கள் நடத்தை மாறலாம். இப்படிப்பட்டவர்கள் ஒருகடவைக்கு மேற் குற்றஞ் செய்தவர்களானலும் நாளடைவில் சீருக்கு வரலாம். இவர்கள் விஷயத்தில நற்போதனைகள் அநேகமாய் வீணகாது. அவர்களை இகழ்ச்சி செய்யாமல் புத்தி சொல்லி அவர்களுக்குத் தக்க வேலைகளைக் கொடுத்து அவர்களை உஜ்ஜீவிக்கும்படி செய்வது நலம்.

மனதாற் செய்யும் குற்றங்கள். ஒருவனைப்பற்றிக் கெடுதலாக நினைத்தல், பொறாமைப் படுதல், ஒரு ஸ்திரீயைப் பற்றித் துராசைப்படுதல் முதலியவைகள் மனதால் செய்யப்படும் குற்றங்கள். நினைவுகளால் ஏற்படும் குற்றங்களை சாதாரணமாய் ஏழைகளும் தனவந்தர்களும் தினசரி செய்கிறார்கள். அவர்களுக்குள் இயற்கையாய் ஏற்பட்டிருக்கும் சக்திகளின் பெருமையை உணர்கிறதில்லை. மனிதன் எந்த நிலைமையில் எந்த இடத்திலிருந்தபோதிலும் தன் நினைவை ஒருமைப்படுத்திக் கெட்ட நினைவுகளுக்கு இடங்கொடாமல் நல்ல சிந்தனைகளுக்கே மனதில் இடங்கொடுத்து வந்தால் பிறருக்கு எவ்வளவோ உதவி புரியலாம். இவ்விதமே கெட்ட எண்ணங்களாலும் கெடுதல்கள் விளைவிக்கலாம். நீராவி சக்தி மின்சார சக்தி இவைகளைக் கைத்தொழில்களுக்கு சகாயமாய் உபயோகப்படுத்துவதற்கொப்ப எண்ணங்களைபிறர் நடத்தையின் விஷயத்தில் உபயோகப்படுத்தலாம். ஒருவன் பேசினால், எவ்விதம் அவன் வாயினின்றும் வெளிப்படும் வார்த்தைகள் தொனிக்குத் தக்கவாறு ஆகாயத்தில் பரவிப் பக்கத்திலுள்ள ஜனங்களின் காதிற் புகுமோ அவ்விதமே, ஒருவன் எண்ணும் எண்ணமும் அவன் மனதினின்று வெளிப்பட்டு; அதிக சூக்ஷ்மமான தத்துவமமைந்த மெல்லிய ஆகாசத்தின் மூலமாய் மனதிற் படும். அப்படிப் படுவதினால் நல்லெண்ணமானால் அவர்கள் மனதில் நல்லெண்ணத்தையும், கெடுதலானால் கெட்ட எண்ணத்தையும் உண்டாக்கும் எண்ணங்கள் இன்பத்தைத் தரக்கூடியதானால் சந்தோஷத்தையும், விசனகரமானால் விசனத்தையும் உண்டாக்கும். இவ்விதமாய் ஒருவன் கோபமான எண்ணத்தைக் கொள்வானேல் பக்கத்திலுள்ளவர்களையும் தன்னைப்போல் கோபப்படும்படி செய்யலாம். கோபமேற்பட்டால் புத்திமயங்கும். புத்திமயக்கத்தால் பிறர்க்குத் தீங்குசெய்ய எண்ணமுண்டாகும். தீய எண்ணங்களை உற்பத்தி செய்கிறவனுடைய இச்சையின் சக்திக்கேற்றவாறு எண்ணங்களுக்கும் எண்ணங்களால் ஏற்படும் ரூபங்களுக்கும்

சக்தி ரோற்படுகிறது. இதனுல் எண்ணங்களாலும் குற்றச் செய்கைகள் ஏற்படலாமென்று அறிகிரோம். இப்படிப் பட்ட குற்றங்கள் ராசாங்கச் சட்டத்தின் பரிசீலனைக் குட் பட்ட வகைகளல்லவென்று எல்லாரும் அறிந்த விஷயமே. ஆனுல் மேற்படி குற்றங்கள், சித்திரபுத்திரன் கணக்கில் தாக்கலாகும். அதாவது ஆகாசப்பதிவுகளில் தாக்கலாய் இந்த ஸ்தூல உலகத்தை விட்டுப் போன பிறகு அவ்வித எண்ணங்களை உற்பத்தி செய்தவர்களை அவைகள் பாதிக் கும். மனதினுல் செய்யப்படும் குற்றங்கள் ராஜாங் கத்தாரால் கவனிக்கமுடியாதவையாகையால் அப்படிப் பட்ட எண்ணங்களைக்கொள்கிறவர்கள் வெளிப்படையாய்க் குற்றங்கள் செய்யாமலிருந்தால் பொது ஜனங்கள் அவர் களை நல்லவர்களென்றே நினைக்கிறுர்கள். ஆனுல் வாஸ்தவம் அப்படியல்ல, ஆகையால் ஒவ்வொருவரும் நமது மனதில் உதிக்கும் எண்ணங்களின் தன்மையை நன் ருய்க் கவனித்து, கெட்ட எண்ணங்களுக்கு இடங்கொடா மல் விலக்கி விட்டு நல்ல எண்ணங்களையே சிந்தித்து வரு வோமானுல் பிறருக்கு எவ்வளவோ நன்மை புரியலாமென் பதை நாம் எல்லோரும் ஞாபகத்தில் வைப்போமாக. இது பற்றியே ஒவ்வொரு தேசத்திலும், ஜாதியிலும், வகுப்பி லும், வர்க்கத்திலும் ஆசீர்வாதம் கூறுதல் என்ற வழக்கம் நடந்து வருகிறது. தேசக்ஷேமத்தை நாடி ஜபதபங்கள் செய் வதும், மற்ற வர்ணத்தாருக்குக் கல்வி கற்பிப்பதும், முற் காலத்தில் பிராமண தர்மமாக ஏற்பட்டிருந்தபடியால், மேற் கூறிய தொழில்களுக்குச் சம்மந்தமில்லாத மற்ற வர்ணத்தா ரின் எண்ணங்களுடன் இந்த வர்ணத்தாரின் உயர்வான சிந் தனைகள் கலக்காமலிருக்கும் பொருட்டுப் பிராமணர் களை பிரேத்தியகமாய்ப் பிரித்து அவர்களுக்குத் தனிமை யான தெருக்கள் ஏற்படுத்தியிருக்கிறுர்களென்று சொல்ல லாம். இவ்விதமே மற்ற வர்ணத்தார்களுக்கும் வெவ்வேறு தெருக்கள் ஏற்படக் காரணமாயிற்றென்று சொல்லலாம்.

அன்னமயகோசத்தை அதாவது ஸ்தூலதேகத்தை விட்டு விலகி மற்றக் கோசங்களுடன் புவர்லோகத்துக்குப் போன கெட்ட சுபாவமுள்ளவர்கள் பூலோகத்திலுள்ள சில துற்ப லமுள்ளவர்களைத் தூண்டி விட்டுத் தங்களுடைய பூலோக விரோதிகளுக்குக் கெடுதி செய்யும்படி செய்யலாம். எண்ணங்கள் விஷயமாயும் புவர்லோக சம்மந்தமாயும் பிரஹ்ம ஞான சபை அக்கிராசனாதிபதி மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையார், மிஸ்டர் லெட்பீட்டர் இவர்களாலும் மற்றவர்களாலும் எழுதப்பட்ட புஸ்தகங்களைப் பார்த்து விவரமாய்த் தெரிந்து கொள்ளலாம். ஆனால் பூலோகத்தில் தண்டனை அடைந்து, குற்றவாளி யென்று பெயர் சூட்டப்பட்டு வருகிறவர்கள் எல்லோருமே அவர்கள் சுயபுத்தியாய் குற்றங்கள் செய்தவர்களென்று சொல்லமுடியாது. மேலும் தற்காலத்தில் கோர்ட்டுகளில் விடப்படும் சாக்ஷியமும் யதார்த்தமான சாக்ஷியமென்று சொல்வதற்கில்லை. இது கோர்ட்டு நடபடிக்கையில் புகும் ஒவ்வொருவருமே நன்றாய் அறிந்த விஷயம். ஆகையால் இராஜாங்கச் சட்டம் இன்னது ஈசுவர சட்டம் இன்னது, என்று அறிந்தவர்கள் அப்படி அறியாதவர்களை இருவகைக் குற்றங்களிலிருந்தும் நீக்கவேண்டிய ஏற்பாடுகள் செய்யக் கடமைப்பட்டவர்களா யிருக்கிறார்களென்று உணர்ந்து நடப்பார்களாக. அவ்விதமே கடவுள் அருள் புரிவாராக!

கே. எஸ். இராமசந்திர ஐயர்.

---


**பைண்டு பண்ணின சில பிரதிகள் தான் பாக்கி!**

பூர்ணசந்திரோதயம் 4-ஆம் தொகுதி விலை ரூ 2—8—0.

ப. நாராயண ஐயர், புரோபஸர் ஆர். ஸ்ரீனிவாஸையர், எம். ஏ. கே. கோடீசுவரய்யர், ஆர். எஸ். நாராயணசாமி ஐயர், பண்டிதம் கோபாலகிருஷ்ணையர், ஆர். சுந்தரராஜ ஐயர் முதலிய அறிவாளர்களால் எழுதப்பெற்ற அறிய பெரிய வியாஸங்கள் கொண்டது. இனிக்கிடைத்தலரிது. முந்துங்கள்.

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ், மதுரை.

# இறைவனுக்குத் தொண்டு செய்வது எப்படி?

---

பழைய காலத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் இதே ஸ்தலத்தில் நாம் யாவரும்கூடி பிரஹ்ம வித்யா சபையாரால் உலகிற்கு மறுமுறையும் அளிக்கப்பட்டுள்ள உண்மைகளைப் பற்றி விசாரணை செய்து வந்தது உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். ஆனால் இன்றிரவு கூடியுள்ள கூட்டமோ வேறு வகையானது. உலகனைத்தையும் பாழ்படுத்தின பெரும் போரானது ஐந்து ஆண்டுகள் நிகழ்ந்தது. இவ்வைந்து ஆண்டுகளும்நான் உங்களை விட்டு ஸ்தூலத்தில் பிரிந்திருந்தேன். இப்பொழுதோ நீங்கள் எனக்கு நல்வரவு கூறுகின்றீர்கள். அவ்வாறு நீங்கள் நல்வரவு கூறும் பொழுது, உங்கள் காரியதரிசி என்னைப்பற்றி சிலாகித்துக் கூறிய மொழிகள் எனது யோக்கியதைக்கு மிஞ்சி விட்டன. நான் சம்மதப்பட்டவரையில், இதைத்தான் நான் உரைக்கலாம். உங்களில் யாவருக்கும் காந்தியையும் உஷ்ணத்தையும் கொடுக்கும் "சூரியன்" நானல்ல. ஏனெனில், ஹெலினம்பாள் அம்மையாரும் தம்மைப்பற்றி ஓர் சமயம் "(ஞான) சூரியனுடைய ஒளியைப் பெற்றுப் பிறர்க்கு அதையளிக்கும் ஓர் கண்ணாடியே தவிர வேறென்றில்லை" என்றார்கள். ஆதலின், உலகின இருளையகற்றி அதற்கு ஜீவனையும் ஒளியையும் தரும் பிரஹ்ம வித்தையெனும் ஞான சூரியன் சொற்பமேனும் பிரகாசிக்கின்ற ஓர் கண்ணாடியாய் நாமிருந்து அவ்வாறு ஆனந்தத்தை யளிப்பதே போதுமான பாக்கியமென்று எனக்குத்தோன்றுகின்றது. நமக்குப் பெரியதோர் ஞான வொளிகொண்டு வரும் எவரும் அவ்வொளியினால் பெரும் பயனடைந்தவர்களுடைய மனதில் தமது யோக்கிதைக்கு மிஞ்சியதோர் ஸ்தானம் அளிக்கப்படலும் சாத்தியம். அவ்வித ஜீவசக்தியைத் தாங்கும் கலன் அச்சக்தியின் நறுமணத்தாலும், அழகாலும், உயர்வாலும், தனது யதார்த்த ஸ்வரூபம் மாறி, பிறிதொரு மேலான

நிலைமையை அடைவது போற் புலப்படுகின்றது. வெள்ளியம்பலம் என்ற ஞானிகளின் சங்கத்தினின்று, உலகின் தேவைக்குத் தகுந்தாற் போல், உயர்தரப் பக்குவமுடைய மஹான்களோ அல்லது அவர்களின் தாழ்ந்த சீடர்கள் அல்லது தூதர்களோ நம்மவர் மத்தியில் அனுப்பப்படுகின்றனர். இம்முனிவர் குழாத்தின் அளவிறந்த அன்பைப் பற்றியும் சக்தியைப் பற்றியும், இப்பெரியார்கள் திரும்பவும் எடுத்துரைப்பார்கள். அவர்கள் கொண்டுவரும் செய்தி அல்லது சுவிசேஷம் தான் பிரதானமே தவிர, அதைக் கொண்டுவரும் கம்பி அல்லது கால்வாய்கள் அல்லது மூர்த்திகள் அத்துணை பிரதானமல்ல.

உதயதிசை நக்ஷத்திர சங்கத்தைச் சேர்ந்த நாம் யாவரும் நமது நக்ஷத்திரத்தைப் பார்க்கும் பொழுதெல்லாம் உலகில் சீக்கிரம் அவதாரம் செய்யப்போகின்ற பெரியாருடைய சின் முத்திரையென அதைக் கருதுகின்றோம். ஆன்மார்த்த வாழ்க்கையை யனுஷ்டிக்க முயலும் யாவர்க்கும், அவர் ஞானபாநு. நாம் அவரை அறிந்தாலும் அறியாவிடினும் அவர் நம்மவர் அனைவரையும் நன்கறிவார். அவர் எவ்வுயிரிடத்தும் பிள்ளையிடம் தாய்போன்ற பேரன்புடையவர். அவரோ "பக்தி வலையிற் படுவோர்." ஆகலால் இந்த நக்ஷத்திரம் நமது உத்தமக் கனவுகளில் நாம் கண்ட பேரவாவின் முடிவான நிச்சயத்தினும் சிறந்ததோர் மெய்ப் பொருளை விளக்குகின்றது. ஏனெனில், நம்முலகனைத்துக்கும் ராஜாதி ராஜராய் விளங்கும் வெள்ளியம்பலத்திறைவர் வசிக்கின்ற சுவேதத்துவீபத்திலுள்ள கற்பாறைக் கோவில் மீதும் இஃது ஜ்வலிக்கின்றது.

பலஸ்தீன் நாட்டில் கிறிஸ்து பிறந்த கிராமத்தின் மீது பிரகாசித்ததாய்க் கூறப்படும் நக்ஷத்திரமும் இதுவேயாம். இதைத்தான் உதயதிசை நக்ஷத்திரமென்பார். ஏனெனின், உலகின் கிழக்குப்பாகத்தில் தான் சூரியன் உதிக்கின்றான். அப்பரமபுருஷன் எக்காலமும் அங்கிருப்பதை இந்நக்ஷத்திரம் நமக்குத் தெரிவித்து அவருக்கு

முன்னோடியாய் விளங்குகின்றது. அதனோடு ஒவ்வொரு மனிதன் ஹிருதயத்திலும் நின்று பிரகாசிக்கின்ற அந்தராத்மாவும் இதுவேயாம். நம்முலகினர் அறியக்கூடிய மிக மேலான உண்மையின் சின்னமும் இதுவேயாம். ஆயினும் இஃது மேல் கீழ் என்ற பேதம் யாதுமின்றி, எவ்வித ஜீவர்களுடைய மனதிலும தங்கியிருக்கும் தன்மையுடையது. இவ்வித அதிசய சுபாவமும் மேலான சக்தியும் இதனிடம் அமைந்து நிற்பதனாலும், நமது விசுவத்தின் ராஜாதிராஜருடைய சின்முத்திரையாயிருப்பதனாலும் மிகத்தாழ்ந்த பக்குவமுடையவர்களை இதன் ஒளியினின்று நீக்கிவைக்கலாமென்று நீங்கள் ஒரு கணமேனும் நினையாதீர்கள். மிகவும் குறைந்த பக்குவத்திலுள்ள ஜீவர்கள் பால் உங்கள் சகோதர தர்மத்தைக் காட்டி அவர்களை யேற்றுக்கொண்டாலொழிய, உங்களினும் மேலான பக்குவமுள்ளவர்களோடுசகோதர உறவு கொண்டாடலாம் என்று நினையாதீர்கள். அதிக தீன நிலைமையிலுள்ளவர்களோடு நீங்கள் அன்புறவு கொண்டாடாவிடின், உங்களிலும் மிக மேலானவர்களோடு நீங்கள் அன்புறவு கொண்டாடுவதெங்ஙனம்? இதைப் பலமுறையும் உங்களுக்கு வற்புறுத்தியிருக்கிறேன். யாவரிடமுமுள்ள ஆன்மா ஒன்றே. அவ்வான்மா எங்கும் வியாபித்து நிற்கின்றது. மனிதர்கள் ஹிருதயத்தில் மாத்திரமல்லாது எங்கணும் அவ்வொளி மறைந்துளது. "அங்கு இங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்" நிறகின்ற பொருள் அது. அணுவிலும் பரமாணுவிலும விசுவமளாவும தேவேசனிடத்திலும் நிலைபெற்றுள்ளது. அஃது எவ்வுயிர்க்குமுயிராய்த் தழைத்திருப்பது. அதற்குப் புறம்பாயுள்ளது எதுவுமில்லை. இஃது அனைத்தும் பரமனிடமிருந்தே தோன்றுகிறது. "அவனன்றியோரணுவு மசையாது." ஆதலின் இவையாவும் பரமனது திருஷ்டியில் எவ்வாறு தோன்றுமோ அத்திருஷ்டியை நாமும் பெற விரும்பினால் இம்மண்ணுலகில், மண்ணிற் புதைந்து துயரச் சுமை சுமக்கும் மன்பதைகளை மேல்தூக்கி அவர்களது துன்பங்களை யாம் துடைக்கவேண்டும். இதுவே இறைவன் ஆணை. இதுவே அவன் கட்டளை. நம்மிலும்

தாழ்ந்தோரை நாம் புறம்பே தள்ளினல், நம்மினும் மேலானோர் நம்மையும் புறம்பே தள்ளிவிடாரோ? இஃது வெற்றுரையல்ல. 'வாசாகைங்கரியம்' நாம் புரியாது இதனைப் பற்றி கனவுகாண்டலோடு நின்றுவிடாமல் தினசரி வாழ்க்கையில் இது சம்மந்தமாய்ப் பூரண உற்சாகத்தைச் செலுத்தி இக்கொள்கையை யப்பியசித்தலும் வேண்டும். அவ்வாறு நீங்கள் செய்யாவிடின் இறைவனுகிய அப்பெரியோன பெருமையும், அவனது வனப்பின் காட்சியும் நமக்குக் கிட்டாதொழியும். நம்மவர்களில், கடையரிற் கடையரையும் அப்பரமன் தனது சோதரர் எனக்கருதுகின்ருர். இவர்கள் பால் நாம் செய்யாதவற்றை இறைவன் பாலும் நாம் செய்யாதவர்களாவோம்.

"யாவரிலும் தாழ்ந்தவர்களான என் சகோதரர்களாகிய இவர்கட்கு நீங்கள் அக்காரியத்தைச் செய்தமையால் அதையே எனக்கு நீங்கள் செய்தவர்களாவீர்கள்." என்ற இந்த வாக்கினும் மேலான உண்மையும் உலகிலுளதோ? சத்திய ஸ்வரூபியாகிய அவரே இதைக்கூறியுள்ளார். அவர் சர்வவியாபி, எவ்வுயிர்க்குமுயிர் அவரே. அவரது மக்களாகிய ஜீவர்கள் அனைவருக்கும் யாம்தொண்டு புரிவதால் மாத்திரம் நாம் அவரை அடைய முடியும். அவரது திவ்விய ஸ்வரூபத்தை நாம் தரிசிக்க விரும்பின், சூரியன் போன்ற அவரது ஜோதிவாழ்வின் ஒருகிரணத்தையேனும் நாம் உலகில் பிரதிபிம்பிக்க விரும்பின் அவரது மக்களாகிய ஜீவர்களனைவருடனும் நாம் ஒருமை பாராட்டல் மெத்த அவசியமானது. அவர்கள்வேறு, நாம்வேறு என்ற புத்தியை அறவே யொழிக்கவேண்டும். எவ்வுயிரிடத்தும் நீவிர் அன்பு பூண்டொழுகவேண்டும். எவ்வுயிர்கரும் தகுந்த தொண்டு புரியவேண்டும். ஏனெனில் அவர் எவற்றினுமிருக்கின்றானன்ருே? அவரது தாழ்ந்த அம்சத்தோடு உமது அன்பினல் நீவிர் ஒருமித்துக்கொள்வதனல் அவருடைய உயர்ந்த அம்சத்தையும் நமக்குத் தெரிவிப்பார் அவ்வாறே தான் பண்டைநாட்களெல்லாம் நீவிர் காணவேண்டுமெனக் கனவு கண்டகாட்சி உமக்குக் கிட்டி அவரை உள்ளவாறே நீவிர் தரிசித்துக்கொண்டவராவீர்.

ஆர். பஞ்சாபிகேசய்யர் அன்னிபெஸண்டு.
மொழிபெயர்பாசிரியர்.

[1919ஹு ஜூலை மாசத்தில் லண்டன் மாநகரில் குவீன்ஸ் ஹால்ல் மாதுஸ்ரீ பெஸண்டம்மையவர்கள் செய்த பிரசங்கத்தின் சுருக்கம்.]

## 'கோபால கிருஷ்ண கோகலே'

(55 ம் பக்கத் தொடர்ச்சி.)

இனி, இச்சங்கத்தில் சேருபவர்களுடைய விரதம் என்னவெனில், தங்களுடைய ஆயுளில் 20வருஷம் வித்யா விருத்திக்காகப் பாடுபடுவதென்பதும், குறைந்த வரும்படியிலே வேலையைச் செய்வ தென்பதுமாகும். கோகலே இந்தச் சங்கத்திலே 1886-ம்ஸு அங்கத்தினராயினர். சேர்ந்தது முதல் வெகு உற்சாகமாக வேலை செய்து வந்தார். 'பர்குஸன்' கலாசாலையென்ற பிரசித்த வித்யாலயத்தை இவர்தான் கட்டிமுடித்தது. இவர் அந்தக்கலாசாலையிலே செல்வநூல் போதகராகச் சிலகாலமும், சரித்திர போதகராகச் சிலகாலமும் வேலைபார்த்து வந்தார். இவர் தமது மாணாக்கர்களோடு நெருங்கிப் பழகும் சுபாவமுடையவர். ஒரு விஷயத்தை மனதில் ஆழமாகப் பதியும்படி போதிப்பதில் நிகரற்றவரென இவருடைய மாணாக்கர்கள் சிலர் சொல்லக்கேட்டிருக்கிறேன். இம்மாதிரி உபாத்திமைத் தொழில் நடத்திவரும் சமயத்திலே மேதாவியான மகாதேவ கோவிந்த ரானடே அவர்களுடைய பரிசயம் இவருக்கு ஏற்பட்டது. ரானடேயானவர் சரித்திரத்திலும், செல்வநூலிலும் கைதேர்ந்த நிபுணர். நீதிபதியின் ஸ்தானத்திலும் ரானடேயைப் போன்றவர்கள், வெகு சிலரே தான் இருப்பார்கள் என்பது எனது நம்பிக்கை. இவ்வளவு மஹிமையுள்ளவரான ரானடே, கோகலேக்குக் குருவாக விளங்கினர். கோகலே அவருடைய புத்திமதிகளைப் பொன்னே போலப் போற்றி வந்தார். அவருக்கு அறிவிக்காமல் கோகலே எந்தக் காரியத்தையும் செய்யத்துணியார். ரானடேயின் தூண்டுதலின்பேரில், பொதுஜன காரியங்களை ஆலோசிப்பதின் பொருட்டு 'சர்வஜனிக்சபா' என்ற சபையொன்றை இவர் ஏற்பாடு செய்தார். இந்த சங்கத்தின் ஆதரவில் மாதாந்தரப் பத்திரிகை யொன்றை ஆரம்பித்து அதன் மூலமாகச் சங்கத்தின்

உத்தேசங்களைப் பலர்க்கும் பகிரங்கப் படுத்தினர். 1887ல் இவரே அதின் அதிபர் ஆனர். இவர் பத்திரிகையின் அதிபராயிருந்த பொழுது, விஷயங்களை நிர்ப்பயமாயும் வியக்தமாயும் வெளியிடுவார். ரானடேயும் அவ்வப்போது வேண்டிய உபதேசங்களைக் கொடுத்து வந்திருக்கிறர்.

சிறிது காலம் 'சுதாரக்' என்ற பத்திரிகையும் நடத்தி வந்தார். எடுத்த காரியத்தை அரைகுறையாக முடிப்பதென்ற சம்பிரதாயம் இவரிடத்தில் கிடையாது. ஜனங்கள் மெல்லமெல்ல இவருடைய நிலையுள்ள உற்சாகத்தையும், அபரிமிதமான தேசபக்தியையும் அறியத் தொடங்கினர்கள். புண 'டெக்கான்' சபையின் காரியதரிசியாக இருந்தும், கோகலே பொது ஜனங்களுடைய விசுவாசத்தைக்கொள்ளை கொள்ள ஆரம்பித்தார். எக்காரியத்தையும் முன்னின்று முடிக்க வல்லவர் என்ற நம்பிக்கை ஜனங்களுக்கு இவரிடத்தில் உண்டாயிற்று. அதைச் செய்து காட்டத்தக்க சமயமொன்றும் அவருக்குக் கிடைத்தது.

நமது இராஜாங்க வரவு செலவு திட்டத்தை விசாரித்தறிந்து, சில மாற்றங்கள் செய்யவேண்டுமென, இங்கிலாந்திலே ஒரு கமிஷன் ஏற்பாடாயிற்று. இதற்கு 'வெல்பி' என்றவர் அக்கிராசனர். இந்தியப் பிரஜைகளின் பிரதிநிதிகளாகச் சாக்ஷியம் சொல்ல தெரிந்தெடுக்கப்பட்ட கூட்டத்தில், பம்பாயிலிருந்து (சர்.) டி. இ. வாச்சாவையும் கோகலேயையும் அனுப்பினர்கள். கோகலேக்கு அப்பொழுது 31-ஆம் பிராயம். மிக்கப் பொறுப்புள்ள இக்காரியத்தில் லோகநுபவமில்லாத வாலிபரொருவரை நியமித்தது பலர்க்கும் கவலைக்கிடமாயிருந்தது. ஆனால் அவர் அங்கே கொடுத்த சாக்ஷியத்தைப்போல, அவரைவிட அதிக வயதும் அநுபவமும் உள்ள ஒரு பெரும் மேதாவியாலும்கூட கொடுத்திருக்க முடியாதென்பதை, அந்த சாட்சியத்தைப் படித்துப் பார்த்தவர்க்கு நன்கு விளங்கும். இங்கிலாந்திலே இருந்த

சமயம், இந்தியாவின் நிலைமையைப்பற்றி சில பிரசங்கங்கள் செய்தார். அப்போது தான் பம்பாயில் 'பிளேக்' வியாதி மும்மரமாகப் பரவி இருந்தது. வியாதியஸ்தர்களைப் பற்றியும் அவர்கள் வசிக்கும் ஸ்தானங்கள், அவர்களைப் பரீக்ஷை செய்யும் முறை இவைகளைப்பற்றியும், இதற்காக நியமிக்கப்பட்ட சில உத்தியோகஸ்தர்கள் அச்சமயம் செய்த புத்தியற்ற காரியங்களைப்பற்றியும் பலமாக ஆக்ஷேபித்துப் பேசியிருக்கிறார். திரும்ப இவர் இந்தியா வந்து சேர்ந்ததும் பம்பாய் கவர்ண்மெண்டார், அவர் சொன்ன ஆக்ஷேபங்கள் ஆதாரமற்றவைகளென்றும், அவைகளுக்குத் தக்க சமாதானம் சொல்லித்தீரவேண்டு மென்றும் அவருக்கு அறிவித்தார்கள். யாரோ சொன்ன புகார்களை ஆதாரமாகக் கொண்டே கோகலே இங்கிலாந்தில் பிரஸ்தாபித்தார். திரும்பி வந்து அவர்களை சாட்சி கோரவே, ஒருவரும் முன் வரவில்லை. ஆகவே இவர் அவைகளுக்காக கவர்ண்மெண்டாரை மன்னிப்பு கேட்டுக் கொள்ளும்படியாயிற்று.

வெகு சீக்கிரத்திலே கோகலே பம்பாய் சட்டசபை அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அங்கிருந்த பொழுது தான், நிலத்தீர்வை சம்மந்தமான ஆட்சேபமொன்றைக் கொண்டு வந்ததோடுகூட, பண்டமாற்றலில் குடியானவர்களுக்குள்ள பாத்தியத்தைக் குறைக்கும் சட்டமொன்றை அரசாங்கத்தார் கொண்டு வந்தபோது தானும் மேதாவுமாக அதிபலமாக . அதை எதிர்த்து நின்றனர். ஜனசமூகத்துக்கு இடைஞ்சல் தருவதான இந்தச் சட்டத்தை, திடீரென உண்டாக்குவது உசிதமல்லவென்றும், ஜனாபிப்பிராயத்தை அறிந்த பின், இஷ்டப்படி செய்யலாமெனச் சொல்லியும் கவர்ண்மெண்ட் கட்சியார் விட்டுக்கொடுக்காமல் ஒரே பிடியாய் இருந்தது கண்டு, தம் சுவமதிப்பைக் காத்துக்கொள்ளும் வண்ணம், சபையிலிருந்து வெளிக்கிளம்பி விட்டார். 1902ல் கோகலே இராஜப்பிரதிநிதி சட்டசபை அங்கத்தினராயினர். இவருக்கு முன்

மேதா இருந்த ஸ்தானத்தில் இருந்தார். கோகலேக்கு மேதாவிடத்திலும் பெருமதிப்புண்டு. இவ்வருஷ முதல் அவர் ஆயுளளவும் இராஜப்பிரதிநிதி சபையில் அங்கத்தினராயிருந்தனர். அந்த வருஷம், தாம உபாத்திமைத் தொழில் பார்த்து வந்த 'பர்குஸன்' கலாசாலையிலிருந்து நீங்கி விட்டார். அது முதல் பொதுஜன காரியங்களில் முன்னையிலும் தீவிரமாக உழைக்க ஆரம்பித்தார். ராஜப் பிரதிநிதி சட்டசபையிலுள்ள அங்கத்தினர்களுளெல்லாம் இவரே பிரதானமானவர் என்று சொல்லலாம். ரானடேவோடு நெருங்கிப்பழகின காலத்தில் அவரிடத்தில் கற்றுக் கொண்ட பிரதான விஷயம், தனசாஸ்திரம். ஆதலாலே இவருக்கு நாட்டின் செல்வநிலை நன்றாகத் தெரியும் இராணுவச்செலவு வித்யாப்யாசம், சுதேசிகளுக்கு உயர்ந்த உத்யோகம் கொடுத்தல், என்ற பிரதான விஷயங்களில் இவர் காட்டின அறிவும் ஆற்றலும் அதியத்புதமானது.

(தொடரும்.)

வெங்கடரத்னம்.

---

## கோவில் கந்தங்குடி சமாசாரம்

---

### பிரஹ்ம ஞான சபைக் கூட்டம்.

நன்னிலம் தாலூகாவிலுள்ள பிரஹ்ம ஞானக் கிளைச்சபையின் 2-வது கூட்டம் சென்ற செப்டம்பர்மீ 28-ந்தேதி ஷை யூர் ஸ்ரீஸ்கந்தாலயத்தில் எனங்குடி ஸ்ரீமான் வி. இராமசந்திர நாயுடு அவர்களின் அக்கிராஸனத்தின் கீழ் சிறப்பாய் நடைபெற்றது. வெளியூர்களிலிருந்து 35 மெம்பர்களும் (7 ஸ்திரீ மெம்பர்களும்) இன்னும் மற்ற அபிமானிகளுமாக சுமார் 75 பேர்கள் விஜயம் செய்திருந்தார்கள். காலை 10½ மணிக்கு மீட்டிங் ஆரம்பித்த போது அக்கிராஸனாதிபதிக்கு புஷ்பமாலை சூட்டி மேளவாத்தியத்துடன் உபந்நியாச

மண்டபத்திற்கு அழைத்துச் சென்று ஷெயூர் லாட்ஜ் பிரசிடெண்டும் மேனாங்குடி பிரபல மிராசுதாருமான மிஸ்டர் சி. மருதவாணம் பிள்ளையால் அக்கிராஸனாதிபதி இந்த ஜில்லாவில் பிரஹ்ம ஞானப் பிரசாரவேலையில் விசேஷ ஊக்கமெடுத்துச் செய்து வரும் அரிய கைங்கரியங்களுக்கு நாம்செய்நன்றி செலுத்தக்கடமைப்பட்டிருக்கிறோம் என்று விஸ்தாரமாய் எடுத்துரைத்து ஓர் உபசாரணைப் பத்திரம் படிக்கப்பட்டது. பிறகு அக்கிராஸனாதிபதி ஆரம்ப உபந்நியாசம் செய்ய ஆரம்பித்து, இவ்வுலகமானது இப்பொழுது பல விதங்களிலும் விசேஷ மாறுதல்களை அடைந்து வருகிறதென்றும், "பழைய முறைமாறிப் புதுமுறைக்கிடந்தரும், ஈசனும் நல்வழக்கமொன்றால் குவலயம் கேடுறா வண்ணம் தம் சங்கற்பத்தைப் பற் பல வழிகளாலும் நிறைவேற்றி வருகிறார்." என்ற ஆன்றோர் வாக்கியப்படி, தற்காலம் இவ்வுலகில் நடைபெறும் நூதன நிர்மாணத்திற்கு பிரஹ்மஞானமானது விசேஷ உதவிகளைப்புரிந்து வருவது லோகப்பிரஸித்தமானதென்றும், அதன் மஹிமை அபாரமென்றும் அனுபவயுக்தமான அநேக அரிய விஷயங்களை ஸபையோர் மெச்சும்படி எடுத்துரைத்தார். அடுத்தபடி எனங்குடி பிரஹ்மஸ்ரீ எஸ். ஸ்ரீநிவாசய்யர் பி. ஏ. எல். டி. "ரிஷிகள் அல்லது மஹாத்மாக்கள்" என்ற விஷயத்தைப்பற்றி உபந்நியாஸம் செய்தார். அதில், மஹரிஷிகள் இருக்கிறார்களென்றும், இந்த ஜகத்தின் பரிபாகயார்க்கமானது அந்த ஞான மூர்த்திகளான மஹான்களால் நடத்தப்பட்டு வருகிறதென்றும், அவர்களது பெருங்கருணையாலேயே மானவ கோடிகள் ரக்ஷிக்கப்படுகிறார்களென்றும் நவீன சாஸ்திர வாராய்ச்சி மூலமாய் நாஸ்திகர்களும் ஒருவாறு ஒப்புக்கொள்ளக்கூடிய தகுந்த பிரமாணங்களுடன எடுததுக்காட்டினார். பிறகு $3\frac{1}{4}$-மணிக்கு அடையார் பிரஹ்மஸ்ரீ எம். ஸுப்ரமணய்யர் "ஸ்ரீ ஸுப்ரமணயரும் அவரது அத்யாத்ம தத்வரகஸ்யமும்" என்ற விஷயத்தைப் பற்றி அநேக தத்வார்த்தங்களுடன் விளக்கிக்காட்டி, அம்முருகக் கடவுளின் மஹிமையை இனிது எடுத்துரைததார். அடுத்த உபந்யாஸம் காரைககால் ஸ்ரீ எ. நாராயணசாமி நாயுடுவால் "சைவ சித்தாந்தமும் பிரஹ்மஞானமும்" என்பதைப்பற்றிச்செய்யப்பட்டது. அதில் பிரஹ்மஞானப் போதனைகளுக்கும் சைவசித்தாந்தத்திறகும் யாதொரு வித்யாசமுமில்லை என்றும் பிரஹ்மக் ஞானமானது பல தேசங்களிலும் செய்கிற வேலையையே சைவசித்தாந்தமானது தமிழுலகிற்காகச் செய்து வருகின்றதென்றும் இப்படி பிரஹ்மஞான சபைக்கூட்டங்களில் சைவசித்தாந்த வுபந்நியாசமும் நடைபெறுவதினால் தமிழபிமானிகளுக்கு தங்கள் நூலகளிலேயே பிரஹ்ம ஞான உண்மைகள் பொதிந்து கிடக்கின்றனவென்று எடுத்துக் காட்டி, ஆதிகாலங்களிற் போலவே இந்நாளிலும் உண்மையனுபவமுடையோரது கருத்துக்கள் யாவும் ஒரே விதங்களாய் இருத்தலை விளக்கிக்காட்டக் கூடுமென்றும் வெகு அழகான சொல நயம் பொருள் நயத்துடனும் தகுந்த பிரமாணஙகளுடனும் பேசினா. பிறகு நாகை, பிரஹ்மஸ்ரீ ஆர். ஸ்வாமிநாதய்யர், பி. ஏ. பி. எல், அவர்கள், ஸ்ரீ ஜகத்குருவின் வருகையென்ற விஷயத்தைப்பற்றி.

உபந்நியஸித்தார். அதில், அதிஸமீப காலத்தில் ஓர் அவதாரபுருஷன் இவ்வுலகின் 'காரியாதிகளைச் சீர்திருத்தவும் அதர்மம் அழிந்து தர்மம் ஓங்குமாறு செய்வதற்காகவும் வெளிவரப்போகிறார்' என்று சரித்திரவாயிலாகத் தகுந்த முகாந்திரங்களை எடுத்துக் காட்டினார். இக்காலகதியையும் ஸந்தர்ப்பங்களையும் கவனித்துப் பார்க்குமளவில், "நீதமுழுதும் தவிர்த்தே சித்தியெல்லாமளிக்கத் திருவருளாம் பெருஞ்சோதியப்பன் வருதருணம், இதுவே யென்றுலகமறியவிரைந்துரைப்பாய் எல்லாருங் களிப்படைந் துள்ளிசைக் கேத்திடவே" என்று ஸ்ரீ இராமலிங்கஸ்வாமிகள் திருவாய்மலர்ந்தருளியபடி, அத்தகைய ஓர் அவதாரம் இக்காலத்திற்கு இன்றியமையாத அவசியமாகு மென்று சபையோருக்கு எடுத்துக்காட்டக்கூடியதாக அய்யாது உபந்நியாஸம் விளங்கிற்று. கடைசியாய் அக்கிராஸனாதிபதியானவர் தன் முடிவு உபந்நியாஸத்தில் மனிதர்கள் தங்கள் சிறு வாழ்வை யொழித்து, பெரியோரைப்பேணிப் பெருவாழ்வை நாடுவதற்கு உலகத்தில் பலவித மார்க்கங்கள் ஏற்பட்டிருந்தாலும் அவையெல்லாம் லோகசேவை என்பதையே குறிப்பிடுகின்றன வென்றும், அஃதொன்றின் மூலமாய்த்தான் தனிமுதற் பொருளை நாடுவது உண்மையா மென்றும் அந்த உலகிற் குழைத்தல் என்ற தர்மத்தையே பிரஹ்மஞானமானது வற்புறுத்திக்கூறுகிறதென்றும் தன்னாலாக்கிய உலகத்தை ஸம்ரக்ஷிப்பதே ஈசுவரனின் சங்கல்பமென்றும் அந்த அவருடைய ஸங்கல்பத்தை நிறைவேற்றுவதில் நாம் அவருக்கு ஊழியம் செய்வதே அவரை அடையும் உண்மையான வழியென்றும், அந்த ஸேவா மார்க்கத்தில் தான், கர்மம் பக்தி ஞானம் யோகம் எல்லாம் அடங்கிக்கிடக்கின்றன வென்றும், ஆகையால் யார், எந்த மார்க்கத்தை அவலம்பித்தாலும் இந்த ஸேவையின் முக்கியத்தை தன்னறிவுடன் பார்க்கவேண்டுமென்றும் கேட்போர்மனதிற் பதியும்படி வெகு உருக்கமாய் எடுத்துரைத்தார்.

இந்த கான்பரன்ஸில் பஞ்சாப்பில் துன்பத்தில் ஆழ்ந்து பரிதபிக்கும் நம் சகோதரர்களுக்கு ஓர் அநுதாபத் தீர்மானம் செய்யப்பட்டது. 40ரூ கையொப்பமிட்டு சில தொகையும் அவ்விடத்தில் வசூலாயிற்று. நிதிக்காக ஓர் பவுன் மோதிரமும் (ஓர் எளிய உபாத்தியாயரால் தன்கையில தற்சமயம் பணமில்லையென்று சொல்லி) இனமளிக்கப்பட்டது.

இந்தக் கான்பரன்சில் குறிப்பிடத்தகுந்த இன்னுமொரு முக்கிய விஷயமுண்டு. ஸ்திரீமெம்பர்கள் சிலர் சேர்ந்து இந்த மாதாந்தர மீட்டிங்குக்குப் போய் ஆங்காங்கு ஸ்திரீகளின் கூட்டமொன்று ஏற்பாடு செய்து அவர்களுக்குபயோகமான விஷயங்களை உபந்நியாசம் செய்து வருகிறார்கள். இச்சமயம் ஏனங்குடி ஸ்ரீமதி ஸாவித்திரி அம்மாளால் "வீட்டில் கவனிக்கவேண்டிய சுகாதாரவிதிகள்" என்ற விஷயத்தைப்பற்றி உபந்நியாஸம் செய்யப்பட்டது.

திருமீயச்சூர், ஆர். சாமிநாதய்யர்,
கான்பரன்ஸ் காரியதரிசி.

## தற்கால நிலைமை.

(135-ம் பக்கம் தொடர்ச்சி.)

---

கனம் பார்ன்ஸ் அவர்கள், கண்டதே காட்சி என்ற நிரீசுவர வாதத்தை மிகவும் ஆக்ஷேபித்துப் பேசினர். தொழிற் கக்ஷியாரின் கக்ஷி கூலியை உயர்த்துவது மட்டும் என்று நினைப்பது மதியீனமென்றும், மனிதனுடைய தர்மம் என்ன, அவன் தன்னுடைய நிலைமையை எங்ஙனம் மேன்மைப் படுத்துவதென்பதை யாவரும் பரியாலோசனை செய்யவேண்டுமென்றும் சொல்லி முடித்தார். சகோதரபாவத்தை அடிப்படையாகக் கொண்டது தொழிற்கட்சியாரின் கிளர்ச்சியென்றார் ஸ்ரீ ஜார்ஜ் லான்ஸ்பரி. இந்தியாப் பிரதிநிதியான ஸ்ரீ வாடியா சொன்னதென்னவெனில், இந்தியாவில் புதிதாய்க் கிளம்பியுள்ள தொழிற்கிளர்ச்சி முக்கியமாய் மதப்பற்றுள்ளது. கர்மத்தின் தத்துவத்தையும், கடவுள் எங்கும் பரவியுள்ளார் என்பதையும், மனிதர்கள் அனைவரும் சகோதரர் என்ற உண்மையையும் திடமாய் நம்பியுள்ளவர்கள் இந்தியத் தொழிலாளிகள் என்று எடுத்துரைத்தார். ஒவ்வொரு வர்ணத்திலும் சகோதரபாவமானது மிகவும் நன்றாய்க் காட்டப்படுகின்றது என்றும் ஒரே வர்ணத்தில் வெகு தரித்திரத்தினுடைய பிள்ளைக்கும் அதிதனவான் பெண்ணுக்கும் கலயாணம் நடப்பது சாவசாமானியம் என்றும் எடுத்துக்காட்டினர்.

***

தொழிற் கிளர்ச்சியின் மேன்மையான மதப்பாங்கான தத்துவங்களை அடியிறகூறியபடி ஒருவர் எடுத்துக்கூறினர்.

பொது ஜனநன்மைக்காக ஒருவன் தன்னை பரித்தியாகம் செய்தல். இது தொழிற்கிளர்ச்சியின் ஆரம்பத்தில் முக்கியமாய்க் காணப்பட்டது. இப்போதும் இதற்குச் சான்றுகள் ஏராளமாய்க் காணப்படுகின்றது.

ஸேவை செய்வது ஜனங்களின் கடமை. அக்கடமை யினின்று தான் வேலை செய்ய உரிமை யுண்டாம்.

ஸகல மனிதர்களும் சகோதரர்கள் என்பதை உணர்ந்து அதை நடத்தையில் அந்தரங்கத்துடன் உண்மையாய்க் காட்டல்.

ஸர்வதேசங்களும் தனித்தனியல்ல, ஆனால் அவை யெல்லாம் ஐகமத்தியத்துடன் இருக்கவேண்டும.

பொதுஜனக்கட்டுப்பாட்டுக் கடங்கி நடப்பதவசியம்.

சுயலாபத்திற்காகப்பொது நன்மைக்குத் தீங்கிழைப் போரைக் கண்டிப்பதவசியம்.

பணத்தின் பெருக்குக்கு இடையறாது விரோதமாயிருத்தலவசியம்.

தரித்திரத்தை நீக்க வேண்டு மென்று விடாமுயற்சி யுடன் பாடுபடவேண்டும்.

உலகத்தில் யுத்தம் நிகழாது நீக்கவேண்டு மென விடா முயற்சியுடன் பாடுபடவேண்டும்.

மேற்கூறிய மேலான முடிவுகளை உண்டு பண்ணுமாறு விடா முயற்சியுடனும் தீவிரமான தீர்மானத்துடனும் உழைக்கவேண்டும். அவ்வாறு உழைப்பதில் எத்தகைய இடையூறு வரினும் யாவர் விரோதம் நேரிடினும் அவைகளைக் கருதாது பாடுபடவேண்டும். இத்தகைய உயர் லக்ஷ்யம் வேண்டும்.

***

இப்போதிருக்கும் ஜனசமூக நிலைமையைத் தவிர மேலான நிலைமையானது அவசியம் வருங்காலத்தில் ஏற்படும் என்ற திடமான நம்பிக்கை. முன் அனுபவத்திற்கு முரணாயிருந்தாலும் இன்னம்பிக்கையானது இத்தூல வுல

கின் அனுபவத்தினின்று ஏற்படாமல், அதற்குப் புறம்பான மேல் உலகங்களினின்று ஏற்படுகின்றது.

***

இந்நம்பிக்கையானது அநேகமாக வியக்தமாகக் கூறப்படா விடினும் யாவரிடத்தும் நிச்சயமாய்க் குடிகொண்டிருக்கின்றது. இந்நம்பிக்கையைச் சிலர் உலக விகாஸம் நடைபெறுவதற்காக இயற்கைச் சக்திகளை ஆதாரமாகக் கொண்டதாகக் கூறுகிறார்கள். மனிதன் இதுகாறும் விகாஸமடைந்தது இச்சக்திகளால், இனியும் அவனுடைய மேம்பாட்டை அவைகள் உண்டுபண்ணும் எனக்கூறுகிறார் ஒரு சாரார்.

***

அனுபவத்தைப் பற்றினதாயில்லாமல், ஒவ்வொரு மனிதனும், ஜனஸமூகமும், இவ்வாறு ஒழுகவேண்டுமென்று விதிக்கிற ஆசார தர்ம விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்று கூறுகிறார் ஒரு சாரார்.

***

கீழ் நாட்டார் கூறுவதோ, கடவுள் எங்கணும் வியாபியாகையால் மானிடர் யாவரும் ஒன்றே என்ற உண்மையினால் இந்நம்பிக்கையானது பொருந்தும் என்று இங்ஙனம் பற்பல காரணங்கள் கூறினும் மேற்கூறிய நம்பிக்கையானது திடமாயும் உண்மையாயும் ஏற்பட்டிருக்கின்றது.

***

மேற்கூறிய கொள்கைகளையும் மேல் நோக்கங்களையும் கொண்ட தொழிற் கிளர்ச்சியானது உலகத்திற்கு க்ஷேமத்தை விளைக்கும் என்பதில் யாதொரு ஐயப்பாடும் இல்லை.

ஆர். அரங்கசாமி ஐயர்.

# மாது ஸ்ரீ பெஸண்டு அம்மையார்.

---

ஆன்மார்த்த வாழ்க்கையை அப்பியசித்துவருதலில் நமது தலைவரவர்களான பெஸண்டு அம்மையார் அதனை எவ்வாறு அப்பியசித்து வருகின்றனரோ அதுபோல் அப்பியசித்துவருகின்றவர்கள் இந்தியாவில் எவருமில்லை. நம் நாட்டின் பல வேறு பாகங்களில் தூய துறவிகள் பலர்வசித்துவருகின்றனரென்று நாம் கேட்டிருக்கலாம். நான் அவர்களைப் பார்த்ததில்லையாதலால் அவர்களைப்பற்றிப் பிரஸ்தாபிப்பதற்கில்லை. ஆயினும் நமது "அன்னை" யை அருகாமையிலிருந்து பார்த்துவரும் பாக்கியம் பெற்றுள்ளேன். தினசரி அவர் செய்யும் வேலையை நான் பார்த்து வருவதினால் ஆன்மார்த்த வாழ்க்கையைப் பயின்று வருபவர்களிலெல்லாம் தற்போது இந்தியாவில் அவரே மிகச் சிறந்த ஒப்பற்றவோர் உதாரணமாய் விளங்குகின்றார் என்று நிச்சயமாய்க் கூறுகின்றேன்.

மேற்கூறிய ஆன்மார்த்த வாழ்கையோ தியான முதலியன மாத்திரம் கொண்டதல்ல. தியானமும் அதில் அவசியமே. ஆயினும் இறைவன் நமது நித்திய நன்மைக்கென வகுத்திருக்கும் "முறை" அல்லது ஒழுங்கை தியானத்தினால் சிறிது அறிந்துகொண்ட பின்னர் நீவிர் உமது உற்சாகத்தினால் அதை (அம்முறை அல்லது ஒழுங்கை) இவ்வுலகில் நிறைவேற்றவும் தூண்டப்படுகின்றீர்கள். அம்"முறை" அல்லது "ஒழுங்கு" இரண்டு பாகமுள்ளது எனக் கூறலாம். மனித சமூகத்தில் பரமன் நடக்க வேண்டுமென விச்சைகொண்ட பேரழகு வாய்ந்ததோர் ரசனை ஒரு பாகம். மனிதர்களுடைய அறிவின்மையாலும் சுயநயத்தாலும் பரமனது சங்கற்பமாகின்ற அந்த ரசனை கெட்டுப்போயிருப்பது போலுள்ளது மற்றொன்று. (இறைவன் தன் திருவுளத்தில்) உலகம் எவ்வாறிருக்கவேண்டுமென்று சங்கற்பிக்கின்றானோ

அதையறிந்தவர்கள் தற்போதுள்ள சீர்கேடான வுலக நிலைமை மாற்றி இறைவன் கருத்திற் கிணங்க யாவும் நடைபெறுமாறு பிரதி தினமும் உழைப்பார்கள். இதைப்போலவே தான் நாமொவ்வொருவருடைய உள்ளத்திலும் அவனது சட்டம் அல்லது ஒழுங்கு நிறைவேற வேண்டியிருக்கின்றது. நம்பொருட்டும் எம் பொருட்டும் அவர் ஓர் முறை வகுத்திருக்கிறார். அதுவும் முன்கூறியது போலவே இரண்டு பிரிவுள்ளது. (1) நான் இவ்வாறு இருக்கவேண்டும் என்று பரமன் திருவுளம் பற்றியிருக்கும் ஒழுங்கு ஒன்றாகும். (2) அகனோடு பலவிதக் குறைவுகளுடன் (ஈசுவரசித்தத்திற்கு முரணாய்) நான் இந்த நிமிஷத்தில் வசித்து வருகின்ற ஒழுங்கு மற்றொன்றாகும். நான் இவ்வாறு இருக்கவேண்டுமென்று கடவுள் சங்கற்பித்த ஒழுங்கை நானறியும்பொழுது அதைப் பூரணமாய் நடாத்த வேண்டுமென்ற பேரவாவானது என் மனத்திடையெழுகின்றது.

ஆன்மார்த்த வாழ்க்கையாவது யாதெனில், இவ்விதம் உலகிற்கும் எனக்கும் பரமனால் வகுக்கப்பட்ட வனப்புவாய்ந்த பூரண ஒழுங்கை யறிந்து அதனை அனுசரித்தலேயாம். இந்த முறையில் எனக்கு ஏற்பட்டுள்ள பாகத்தை நான் செய்வதாயின், பிறர்க்கு ஏற்பட்டுள்ள பாகத்தைச் செய்விக்க நான் உதவுவதால் மாத்திரந்தான் அது சாத்தியமாகும். இஃதோர் ஆச்சரியமான உண்மை. இதனை நாம் மறக்கப்படாது. ஆதலால், பாரமார்த்திக வாழ்க்கை யென்பது இறைவன் திருவுளத்தையறிதலும், அதனை நடாத்துதலும் என்க. இப்பரமார்த்த வாழ்க்கையில் மெய்யான அத்யயனமும், தியானமும், ஞானமும், கர்மமும், இறைவனிடமும் மானிடர்களிடமும் அன்பும், இணைபிரியாது நிற்கும்.

இத்தன்மைகள் நமதன்னையாகிய மாது ஸ்ரீ பெசண்டம்மையாரிடம் வியக்கத்தக்க வண்ணமாய் விளங்குகின்றன. உலகினர் யாவரும் அவரை ஜனசமூக நாகரீகத்தைத்

திருத்தியமைக்கும் பெரியதோர் தொழிலாளி என்று மாத்திரம் மதிப்பர். இத்துறையில் அவருடைய ஜயத்திற்குக் காரணம் யாதெனில், நெடுங்காலமாய் மானிட சமூகத்திற்கு பேராற்றலுடன் அவர் தொண்டு புரிந்து வந்திருப்பதும், இறைவன் கருத்திலுள்ள "ஒழுங்கு" அல்லது "முறை" யை அவர் நன்கறிந்திருப்பதுமேயாகும்.

இவரோ கர்மயோகி. இவர் தன்மையில் இந்த அம்சமே நம்மனத்தைக் கவர்ச்சி செய்கின்றது. (ரஜோகுணத்தின் இயல்பாகிய பூரண) வீர்யம் அல்லது சக்தியும் (சத்துவத்தின் இயல்பாகிய) நிதானம் அல்லது நடுநிலைமையும் இவரிடம் ஒருங்கே அமைந்துள்ளன. இவ்விரு குணங்களும் ஏககாலத்தில் ஒருவரிடம் பொருந்தி யிருப்பது மிகவும் துர்லபம். அம்மையாரின் வாழ்க்கை முழுவதுமே சிரமமான வாழ்க்கை. அவர் பல பெரிய இடையூறுகளோடும் போராடி அவற்றை மேற்கொண்டிருப்பவர். ஓர் சேனாதிபதி அல்லது தளக்கர்த்தனுடைய தீவிரத் தீர்மானத்தையும், மெய்த்துறவியின் நிராசை அல்லது பற்றுதலின்மையும் அவர் ஒருங்கே பெற்று விளங்குகின்றனர். நந்தேசபக்தர்களில் எவரும் அம்மையவர்கள் நம்பொருட்டுப் பாடுபட்டுச் செய்கின்ற வேலையில் பத்திலொரு பங்குகூடச் செய்கிறார்களில்லை.

இந்தியர்பால் அவர் கொண்டிருக்கும் பிரேமையில் பத்திலொரு பங்குகூட நந்தேசாபிமானிகள் கொண்டிரார் என்பதே எனது துணிபு. நான் பார்த்தவரையில் இது என் அனுபவம். இடையூறுகள் எவற்றையும் சிறிதும் சட்டைசெய்யாது மேற் செல்கின்ற உற்சாகமும் உயர்லக்ஷியமும் கொண்டவர் அவர். எவ்விதத் துன்பமும் மானக்கேடும் தனக்கு வரினும், அதன் மூலமாய் இந்து தேசத்திற்கு இறைவன் ஏற்படுத்தியுள்ள ஒழுங்கு நடைபெறவேண்டும் என்ற உறுதி கொண்டவர். ஆதலால், தம் பாதையில் குறுக்கிடும் இடர்களைப் பொருட்படுத்தார். இந்தியரும் மற்

ரூரும் அவருடைய கருத்துக்களை விபரீதமாய்க்கொண்டு, அவரை நிந்தை செய்து வசைமொழிகள் கூறிய காலத்தும் இறைவன் கருத்தை இவ்வுலகில் இயற்றுவிக்க ஓய்விலா ஊக்கத்துடன உழைத்திருக்கின்றனர் பாருங்கள்!


இவ்வாறு சேவை செய்வதில் தமக்குறும் துயரம், அவமதிப்பு முதலிய அனைத்தையும் அவர் இந்தியமாதாவிற்கும் உலகிறகும் தொண்டு புரிவதற்கேற்ற கருவிகளாய்ச் செய்து கொண்டிருக்கின்றனர். பாருங்கள் தீமைகளெல்லாவற்றையும், நமமன வலிமையினால் நனமையாக்கிக் கொள்ளுதலும், நமக்குறும் துனபங்கள யாவையும் உலகியலையறிகின்றவோர் கருவியாக்கிக் கொள்ளுதலுமே, அவரது பாரமார்ததிக வாழ்க்கையின அடையாளம. அவர் "தியாஸபிஸ்ட்" "நியூ இந்தியா" என்ற பத்திரிகைகட்கு வியாசமெழுதலோ, பாரமார்த்திக விஷயங்களைப் பறறியோ, அல்லது சீர் திருத்தப் பிரேரணைகளைப் பறறியோ பிரசங்கஞ் செய்தலோ, இந்தியா முழுதும ஊரூராய்ப்பிரயாணஞ்செய்து, தேச கைங்கரியததிறகென, பல வேறு விதமான அரசியற் கொளகைகளுள்ள ஜனங்களை யொற்றுமைப படுத்துதலோ-இததகைய தொண்டு அவர் பிரதிதினமும் புரிவதைப் பாாதத எங்களுக்கு, இறைவனது கருததொண்டா இவர் யெனறும, இவரது வாழககைய்ய பெரு வாழ்ககையென்றும், நறகுணஙகள எவறறிறகும இவரே ஓர் உதாரண மெனறும தோன்றுகினறது. பினனுனில எபபொழுதேனும் அவரைப் போலவே நாமும பரமனது தொண்டராக வேணடுவதாதலின, ஜயம அப ஜயம இவை நமக்குறும போழ்து இவறறிற்கு மேலான நடு நிலைமை அல்லது நிதானம எனனும குணததைப பெற வேண்டுமெனறும, துன்பமும் இருளும நமமைச சூழ்ந்து நிறகும போழ்தும உற்சாகிகளாயும உயர் லக்ஷியங் கொண்டவர்களாயுமிருக்க வேண்டுமென்றும நாம் இவரது வாழ்க்கையினின்று அறிந்து கொள்கிறோம். ஆனமார்தத வாழ்க்கையின இலக்ஷணஙகளைப் பறறிக கூறும நூறகள பல

நாம் படித்திருப்பினும், பிரத்தியக்ஷமாய் அவற்றை யனுசரித்து வருகின்ற பெரியாரொருவரைத் தரிசிக்கும் வரை அவ்வுபதேசங்களின் கௌரவம் உணரப் படுவதில்லை. நமது "அன்னை" வசந்தம்மையாரின் வாழ்க்கையே அந்நூற்களுக்கு மிகச்சிறப்பு வாய்நத பேரதிசயமானதோர் உரை யென்னலாம். இதை யறிந்து கொள்ளும் பாக்கியத்தை நான் பெற்றுள்ளேன். பெசண்டு அமமையாரோ இறைவனது ஞான அம்சத்தை நமக்கு வெளிப்படுத்தும் ஓர் பெறுந் தொண்டர்—பக்தர். ஆனால் அதனோடு அவர் பரமனது சங்கற்பததை இப்பூவுலகில் நடாத்தும வண்ணம் பெரும்பாடு படுகின்றதோர் போர் வீரருமாவர். இவர் ஓர் உயர்தரக் கர்மயோகி.

ஸி. ஜீனராஜ தாஸர்.*

* இஃது சென்ற வருஷம் தாரக சகோதரர் ,என்ற பெயர் புனைந்த ஆங்கிலப் பத்திரிகையில் வெளிப் போந்த வியாசத்தின மொழிப் பெயர்ப்பு தமிழ்ப் படுத்தியவர்—ஆர் பஞ்சாபிகேசய்யர்.

விலை சரசம்! நயம் தினுசு!



கண் சாளேஸ்வரக்காரா! களும், பாரவை மட்டாயிருக்கிற சிறுவர்களுக்கும், கண மங்கல், கண்காந்தல முதலானவைகளுக்கும் ஆபரேஷன் செய்த கணகளுக்கும் இனுமாகப் பரிசோதனை செய்து ஸ்படிக மூக்குக் கண்ணுடிகள் தினுசு தினுசான ரோல்டு கோல்டு, நிக்கல் ப்ரேம்களுடன் விலை சரசமாகக்கொடுக்கப்படும்.

*K. R. &, Sons,* Scientific opticians Madura.,

உயர்ந்த இனிய நாடகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| மாணிக்கவாசகர் | 0—8—0 | மங்களம் | 0--4—0 |
| மீனுக்ஷிசுந்தரம் | 0—6—0 | மீராபாய் | 1—4—0 |

பூர்ணசந்திரோதயம் ௪-வது தொகுதி.

பைண்டுபண்ணின சிலபிரதிகளே பாககி.

உயர்நலம் வாய்நத வியாசங்கள கொண்டது. இனி கிடைத்தலரிது விலை. ரூ 2—8—0.

பூர்ண சந்திரோதயம் ஆபீஸ், மதுரை.

# சாஸ்திர அதிசயங்கள்.

---

ஸர் ஆலிவர் லாட்ஜ் என்பவர் மேனாட்டுப் பௌதிக சாஸ்திர நிபுணர். அவர் அணுக்கள் என்ன, ஆகாசம் என்ன இவைகளைப்பற்றி அதிக ஆராய்ச்சி செய்துள்ளதைச் சென்ற ஆகஸ்டு மீ அப்ஸர்வர் என்ற ஆங்கிலப் பத்திரிகையில் கூறியுள்ளார். அவைகளை முற்றிலும் எடுத்துக் கூறுவது சாத்தியமில்லையாயினும், சிற்சில பாகங்களை எடுத்துக் கூறினால் நேயர்களுக்கு வியப்பையும், விநோதத்தையும், உண்டாக்குவதோடு தற்காலத்தில் சாஸ்திர ஆராய்ச்சி எது வரை சென்றிருக்கின்றது எனபதையும் உணர்த்தும். பிரஹ்ம ஞான சபைத் தலைவர் இருவர் அநேக வருஷங்களுக்கு முன்னர் ஸூக்ஷ்ம திருஷ்டியால் ஒவ்வொரு தாது அணுவையும் நோக்கித் தாங்கள் பார்த்துணர்ந்ததை புஸ்தக ரூபமாய் வெளி விட்டனர். அப்போது மிகவும் தேர்ந்த சாஸ்திர பரீக்ஷகர்கள்கூட மேற்கண்ட விஷயங்களைக் கண்டறியவில்லை. அப்புத்தகத்தில் கூறப்பட்டபடியே அப்பால் சாஸ்திரிகளால் கண்டறியப்பட்டிருக்கின்றன வென்பது மேற்கூறிய இரண்டு பிரஹ்மஞான சபைத் தலைவர்களின் கூரிய ஆராய்ச்சியையும், அவர்களது சூக்ஷ்ம திருஷ்டியின் தெளிவையும் காட்டுகிறது.

ஒவ்வொரு அணுவிலும் அடங்கியிருக்கும் சக்தியானது ஆச்சரிய கரமானது. எவ்வளவு அபாரமான சக்தியென்பதை உணரவேண்டுமானால் 'ரேடியம்' முதலிய தாதுக்களின் சுபாவத்தால் ஊகிக்கலாம். ரேடியம் அணுவின் சக்திகளின் ஒரு சிறு பாகமானது வெளிக்கிளம்புகிறது. ரேடியத்திலிருந்து கிளம்பும் சிறு பிரமாணுக்கள் அதிக வேகமாய்க் கிளம்புகின்றன. வெளிச்சத்தின் வேகத்தில் 15-ல் ஒரு பாகம் வேகத்துடன் அவை கிளம்புகின்றன. ஆனால் அப்படிச் சொல்வதால் எவ்வளவு வேகம் என்பதை நாம் மனதால் கொள்ளமுடியவில்லை. ஒரு துப்

பாக்கியிலிருந்து கிளம்பும் குண்டு—குண்டுகளில் மிகுந்த வேகத்துடன் கிளம்பக்கூடிய குண்டு துப்பாக்கியின் துவாரத்தினின்று 300 கஜம் தூரம் போகும் சாவகாசத்திற்குள் ரேடியத்தினினறு புறப்படும் ஒரு பர மாணுவானது 3000 மைல் தூரம் போய் விடும். அதாவது அது போவதைத் தடுக்கக் கூடிய தடங்கல்கள் இல்லை யென்றால், அப்படி வேகமாய்ப் போகும். அதாவது அவ்வளவு அதிசயமான வேகத்துடன் புறப்படுகின்றது. 3000 மைல் போவதற்குக் காலம் $\frac{1}{4}$ செகண்டுதான்.

அவ்வித வேகத்தோடு புறப்படும் பர மாணு மிகவும் சிறியது. ஆகையால் அதனுடைய சக்தி அதிகமென்று சொல்ல முடியாது. ஆனால் அதன் கனத்திற்கு ஏற்றபடி அது அபாரம். கனத்திற்கு ஏற்றபடி அதன் சக்தியையும் ஒரு துப்பாக்கி குண்டின் சக்தியையும் ஒப்பிட்டுப் பார்க்கப் புகின், துப்பாக்கிக் குண்டை விட அது 40 கோடி மடங்கு அதிகமான சக்தியுடன் கிளம்புகின்றது. ஒவ்வொரு அணுவிலும் இத்தகைய சக்தியானது அடங்கிக் கிடக்கின்றது. ஸர் வில்லியம் குரூக்ஸ் என்ற மற்றொரு சாஸ்திர நிபுணர் சொன்ன பிரகாரம், ஒரு அவுன்ஸ் நிறையுள்ள திரவியத்தில் புதைந்துள்ள சக்தியை வெளிக் கிளம்பினால் ஜர்மன் யுத்தக் கப்பல்கள் படகுகள் முதலிய யாவற்றையும் செங்குத்தாகத் தூக்கி பென் நெவிஸ் என்ற ஒரு மலையின் சிகரத்தில் வைக்கப் போதுமானது.

ஸர் ஆலிவர் லாட்ஜ் மீண்டும் கூறுவது என்ன வென்றால்:

சாதாரண திரவியத்தின் 1 டன் நிறையில் கிடக்கின்ற சக்தியை ஒரு நாளைக்கு வெளிக்கிளப்பினால் உலகத்தில் நடக்கும் எல்லா வேலைகளுக்கும் அது போதும். வேறு ஒன்றும் தேவை யில்லை. ஒரு நாளைக்கு உட்பட்ட காலத்தில் அவ்வளவு சக்தியை வெளிக்கிளப்ப முடியுமானால் இந்த பூமியே சின்ன பின்னமாக்கப் பட்டு இருந்த இடம்

தெரியாமல் உடைந்துபோம். இவ்வித சக்தியை வெளிக் கிளப்பும் சாமர்த்தியம் மனிதனுக்குக் கிடைக்குமானல் இது சாத்தியமாகும்.

உலகம் தற்போது இருக்கும் நிலைமையில் ஒரு சாஸ்திர நிபுணனுக்கு இச்சக்தியை வெளி கிளப்பும் சாமர்த்தியம் உண்டாகுமானல், அந்தோ! உலகத்தின் கதி என்ன வாகும்! உலகமானது விகாஸ முறையில் பக்குவப்பட்டு விநாச சக்திகளை உலகத்தின் கெடுதலுக்கு உபயோகப் படுத்தாமலிருக்கும் படியான அடக்க சுபாவமும், எல்லா சக்திகளையும் உலக நன்மைக்கே உபயோகிக்கும்படியான நல்ல எண்ணமும் உண்டாகும் வரை இவ்விதமான சாமர்த்தியம் மனிதனுக்குக் கிடைக்காமலிருக்க வேண்டும். அவ்வித பக்குவம் வாய்ந்த பின்னர் இச்சாமார்த்தியம் அவசியமாக மனிதனுக்கு வாய்க்கும் என்பதில் எனக்கு சந்தேகமில்லை.

ஸர் ஆலிவர் லாட்ஜ் கூறுகிற படியே உலகமானது பயப்பட வேண்டாம். உலக ரக்ஷகர்களான பெரியவர்கள் இவ்வளவு பெரிய சக்திகளை அனதிகாரிகளான மனிதர்களிடம் ஒப்புவிக்க மாட்டார்கள். அச்சக்திகளைக் கொடுக்கவும் வாங்கவும் அவர்களால் கூடும். ஆகையால் தான் முன் காலத்திலும், இப்போதும் ரஹஸ்ய தத்துவங்களிருந்து வருகின்றன. அவைகளை யாவர்க்கும் தெரிவித்தல் அடாது. அவ்விதமான ரஹஸ்யங்களை அடக்கம் முதலிய குணங்கள் வாய்ந்த பக்குவிகளான ஒரு சிலர் அறியலாம். ஏனையோர் அடைந்தால் லோக விபத்துக்குக் காரணமாகும்

ஆர். ரெ.

## மாது ஸ்ரீ பெசண்டம்மையாரும் ஸ்ரீ காந்தியடிகளும்.

---

நமது பண்டைத்திராவிட நாட்டிற்கோர் திலகமென விளங்கிய ஔவை மூதாட்டியார் "பெரியது கேட்கில் எரிதவழ்வேலோய்" என்ற செய்யுளின் கண் "தொண்டர் தம் பெருமையைச் சொல்வதும் பெரிதே" எனச்சாற்றி முடித்த உண்மையை நாம் நினைக்குந்தோறும் நாம் தொண்டின் பெருமையை யுணராதொழியோம் என்றே கூறலாம். இறைவன் தனது அனந்தவித கல்யாண குணங்கள் யாவையும் உலகிலுள்ள பற்பல பொருள்கள் மூலமாய் வெளிப்படுத்திய போதிலும் மிகுந்த தீவிர பக்குவமுள்ள மானிடர் குழாத்தில் தனது அருள் விலாசத்தையும், தனது சிறந்த அம்சங்களையும் பெரிதும் விசேடமாய்க் காட்டிவருகின்றான். நவீன வுலகில் அவ்விதம் அப்பரமனது பெருமையை நம்மனோர்க்குக் காட்டுவிக்கின்ற பெரியோர் மூவருளர். அவர்கள் மாது ஸ்ரீ பெசண்டம்மையார், ஸ்ரீ காந்தியடிகள், ஸ்ரீ ரவீந்திரநாத டாகூர் என்பவர்களே. இறைவனது அடியார்கள் என்ற பெயர் இம்மூவர்க்கே முழுதும் பொருத்தமாகும். இவர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வோர் துறையில் சாலச் சிறந்தோரெனினும், நமது பெசண்டம்மையோ எத்துறைகளிலும் ஒப்புயர்வற்ற திறனுடனும் ஊக்கத்துடனும், உழைத்து வருகின்றார்.

இதைக் கூறுமிடத்து, பலநேயர்கள் அதனை யாட்சேபிக்கலாம். ஏனெனின், இவரது உத்தம நோக்கங்களையும், மனவுறுதியையும், சலிப்பற்ற ஜன கைங்கரிய உற்சாகத்தையும் பிழையாய்க் கொள்பவர் பலரிருக்கின்றனர் சென்ற சில ஆண்டுகளாய் இவ்வித விபரீத புத்தியைக் கொண்ட நண்பர்களின் சங்கியை அதிகப்பட்டே வந்திருக்கின்றது. நந்தேசத்திற்கு அம்மையாரவர்கள் அன்புடன் செய்துவரும் கைங்கரியங்கள் யாவும் தமது புகழை நினைத்தே

அம்மையார் செய்துவருகின்றனரென்றும், அவர் அகங்காரி யென்றும், நமது நம்பிக்கைக்கு அவர் உரியவரல்லரென் றும் இது போன்ற பல நிந்தை மொழிகளை அவர்கள் உரை யாடுகின்றனர். அம்மட்டோ? அல்ல; ஸ்ரீ காந்தியடி களின் வியாபகத்தையும் கீர்த்தியையும் பார்த்து அம்மை யின் மனஞ்சகியாது அவரை நாசஞ்செய்யவே வழிதேடுகின் றனர் என்பார் வேறு சிலர். ரௌலட் மசோதாவை யெதிர்க்குமாறு, சென்ற மார்ச்சு, ஏப்பிரல் மீ"ங்களில்ஸ்ரீ கா ந்தியடிகள் "சத்தியாக்கிரஹம்" என்ற கிளர்ச்சி தொடங் கிய காலத்து, அம்மையாரவர்கள் அக்கிளர்ச்சியை யொப் பாது, அதனால் விளையக்கூடிய தீமைகளை யெடுத்துக்காட்டி அதனைக் கண்டித்தபொழுது, தேசபக்தர்கள் பலரும், அம் மையின் உயர்குணம சிறிதும் அறியாத சாமான்ய ஜனங் களும் அவரைத தேசத்துரோகி யென்றும், கபட நாடகஞ் செய்பவரென்றும் கூறி வசைமொழிகளால் அலங்கரித்த னர். ஆயினும் 1917ஸ்ரீ முடிவில் இந்தியா முழுதுமே தன்னை மறந்து பெசண்டம்மையாரைப் பெரிதும் போற் றிற்றென்னலாம். நங் தலைவர்களின் உத்தம குணங்களை நன்கறியாது ஓர் சமயம் அவர்களைப் போற்றுவதும் ஓர் சமயம் அவர்களைத் தூற்றுவதுமே சாமானியர் இயல்பா கும். ஆயினும் காந்தியடிகள் மாத்திரம் அம்மையின் சீரி ய வொழுக்கத்தை நன்குணர்ந்தவர். அவரது மெய்யான உண்மை நெறியை ஸ்ரீ காந்தியடிகள் அறிந்திருந்தமையால் ஜனங்கள் அம்மையாரைக் குறை கூறிச் சீறிய காலத்தும் தம்மனத்திடை அவர்பால் உயர்ந்த கௌரவமும் விசுவாச முங் கொண்டவராயிருந்தனர் [இதற்குச் சான்று பின்னர் காட்டிய பிரசங்கமே யாகும்] அம்மையார் ஆதியில் எதிர் பார்த்து எச்சரிக்கை செய்திருந்த வாறே, மெய்ச் சத்தியாக் கிரகம் இன்ன தென்று உணராத சிலரால் வட இந்தியாவில் பல வித விபத்துக்கள் சத்தியா க்கிரகக் கிளர்ச்சியின் அவாந்தர பலனாய் ஏற்பட்டன. சிலகாலஞ் சென்ற பின் அம்மையார் சீமை சென்றனர்.

பிறகு ரௌலட் ஆக்ட் சம்பந்தமாய், சத்தியாக் கிரகக் கிளர்ச்சியும் (பல வேறு காரணங்களைக் கொண்டு) நழுவ விடப்பட வேண்டி வந்தது. யாது காரணத்தாலோ, பெசண்டம்மையார் பால், ஜனங்கள் குரோதம் தற்போது அவ்வளவு பலமாயிருக்க வில்லை. அம்மையவர்கள் செய்த விஷயத்தையும் தாங்கள் செய்து வந்த விஷயத்தையும் பற்றி சற்று நிதானிக்கும் பருவம் தற்போது அவர்கள் அடைந்திருக்கின்றனர் போலும். இச்சமயம் ஸ்ரீ காந்தியடிகள் ஸ்ரீ பெசண்டம்மையாரைப் பற்றித் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டிருப்பது நம்மவர் எவராலும் கவனிக்கத் தக்கது.

சென்ற அக்டோபர்மீ 1உ பெசண்டம்மையின் ஜனன தினக் கொண்டாட்டம் இந்தியாவிற் பல வேறு இடங்களிலும் கொண்டாடப் பெற்றது. பம்பாய் பிரஹ்மஞான சங்கத்தார் அந்த மங்கள தினத்தைக் கொண்டாடுங்கால் ஸ்ரீ காந்தியடிகளை அக்கிராசனம் வகிக்குமாறு வேண்டினர். அவரும் மகிழ்வுடன் சம்மதித்து அப்பொழுது பின் வரும் பிரசங்கத்தைச் செய்தனர். (இஃது "பம்பாய் கிரானிகில்" என்னும் பத்திரிகையினின்றெடுத்த பிரசங்கத்தின் மொழிப் பெயர்ப்பாகும்.)

"இன்று நடை பெறும் கூட்டத்திற்கு நான் வந்து சேர்ந்து உற்சவத்தைக் கொண்டாடுவது எனக்குப் பெருத்த மகிழ்வை விளைவிக்கின்றது. ஏனெனில், பொது நலத்திற்கெனவே தமது வாழ் நாளிற் பெரும் பாகத்தையும் அர்ப்பணஞ் செய்துள்ள அம்மையாரின் ஜனன தினத்தைக் கொண்டாடுவது நமது கௌரவத்திற்குரிய விஷயமே. 1888ஆம் வருஷத்திலோ, 1889ஆம் வருஷத்திலோ, நான் முதன் முதலாய் பெசண்டம்மையாரை சீமையில் சந்தித்தேன். "பிளாவட்ஸ்கி லாட்ஜ்" என்றவிடத்தில் அவருடைய பழக்கம் எனக்கேற்பட்டது. அக்காலத்தில்தான் அம்மையார் தமது நாஸ்திகக் கொள்கைகளை விட்டொழித்து பிரஹ்ம வித்தியா விஷயங்களை விசாரித்து அச்சபையிற் பிரவேசஞ்

செய்திருந்தனர். ஏன் அவ்வாறு அவர் செய்தன ரென்று பலர் கேட்ட கேள்விகளுக்கு அது சமயம் விடையளித்து வந்தார். எல்லா வினாக்கட்கும் விடை பகர்ந்து அதன் பின்னர் தம்மைக் குறித்து "நான் மறித்த பின்னர் ஜனங்கள் யாவரும் சத்தியத்திற்கெனவே அவள் உயிர் வாழ்ந்தாள்—சத்தியத்திற் கெனவே அவள் உயிர் துறந்தாள் என்ற வார்த்தை என்னைப் பற்றிக் கூறினாற் போதும்" என்றார்.

"தென்னாப்பிரிக்காவிற்கு நான் போய் தங்கியிருந்த காலத்தில் அங்கும் பல பிரஹ்ம வித்தியா சபை அங்கத்தினரோடு பழகி வந்தேன். அவர்கள் மூலமாய் அம்மையார் செய்து வந்த வேலைகள் யாவையுமறிந்து கொண்டேன். சபையின் நூற்களிற் கூறப்படாத வேறு பல விவரணங்களையும் இவ்விதம் நான் தெரிந்து கொண்டேன். ஜனங்கள் பெசண்டம்மையைப் போற்றினும் சரி, தூற்றினும் சரி அவர் அவற்றைச் சிறிதும் பொருட்படுத்தாது தமது திட நம்பிக்கைப் பிரகாரம் காரியங்களைச் செய்து வரும் இயல்புடையவர் என்பது இதனின்று எனக்குத் தெளிவாய்ப் புலப்பட்டது.

"சத்தியாக்கிரகக் கிளர்ச்சியில் பல குறைகள் இருக்கின்றன வென்றும் சாமானிய ஜனங்கள் அதைப் பூரணமாய் உணர்ந்து கடைப் பிடிக்க முடியாதென்றும் அம்மையார் திடமாய் நம்பி அதை ஜனங்களுக்கு வற்புறுத்தினர். தம் அபிப்பிராயத்தை ஜனங்கள் ஒப்பினும், ஒப்பாவிடினும், தமது ஆன்மாவில் தாம் கொண்ட நம்பிக்கையை விடாப்பிடியாய் தாம் அனுசரிக்க வேண்டுமென்று இவர் கொள்பவரென்பதைக் காட்ட இஃதும் ஓர் உதாரணமாகும்.

"பொது நலத்திற்கென உழைக்கும் விஷயத்தில் அம்மையாருக்கு ஓய்வு, ஒழிவு என்பது சிறிதுமே கிடையாது. புகை வண்டி யேறிப் பிரயாணஞ் செய்யுங்காலத்தும் இவர் பொது நலத்தை நாடியே பாடுபடுபவர். தற்போது அவ

ருக்கு 72 ஆண்டு நிறைந்தும்ஒப்பற்ற ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் அவர் உழைதது வருவதைப் பார்தது நான் மகிழ்வடைகின்றேன். நம் நாட்டிற்கு அவர் செய்து வரும் நன்மைக்குக் கணக்கில்லை அளவில்லை. அது நமது மதிப்பிற்கடங்காதது, தமது உடல், பொருள், ஆவி யனைத்தையுமே நம்பொருட்டு அவர்தத்தஞ் செய்தவர்.

"ராஜரீக சம்பந்தமான கக்ஷிகள் பலவற்றைச் சேர்ந்த ஜனங்களின அபிபபிராயம் அவர்பால் எவ்வாறிருப்பினும், அவர்களுங்கூட அம்மையார் நம்பொருட்டு இங்கிலாந்தில் செய்து வரும் வேலையைப் பார்த்துப் பெரிதும் புகழ்ந்தே வருகின்றனர். சரீரத்தி லாகட்டும், மனத்தி லாகட்டும் நமது நாட்டிற்கென அவர் பாடு படுவதனல் மிகுந்த சங்கடங்களை யடைந்து விட்டனர். அவருடன் தோழமை கொள்ள விரும்பும் ஐரோப்பியர் எவருமே யில்லை. அம்மையார் நம்மனேர்க்குச் செய்திருக்கும மிகப் பெரிய நனமை யாதெனின், நாம் என்றென்றும் மறக்கொணத நன்மை யாதெனின், நமது நாடு முழுதும் சுய ஆட்சி சங்கங்கள் உண்டாகுமாறு செய்ததே யென எனக்குத் தோன்றுகிறது. அக்கிளர்ச்சியைத் தொடங்கியது அவரே. இந்தியாவின் மூலை முடுக்குகள் எவற்றினும் சுய ஆட்சி சங்கங்கள் பரவி விட்டன. ஆதலால் நாம் எங்குச்சென்ற போதிலும் நமது கிராம வாசிகளும் சுய ஆட்சியின் அவசியத்தை நன்குணர்ந்திருக் கின்றார்கள். இது என் அனுபவம். சுய ஆட்சி மந்திரத்தை நமக்குபதேசித்தவர் அவரே யாதலால், அவரது ஜீவ தசையிலேயே நமது நாடு சுதந்தரமடையுமாறு, அவர் நம்மனேர்க்கு உழைத்து, உதவும் வண்ணம் நீடித்த ஆயுளை எல்லாம் வல்ல இறைவன அவருக்கு அளிக்க வேண்டுமென நான் பிரார்த்திக்கின்றேன். அவ்விதம் எல்லாம் ஏற்பட்டால்தான், இந்தியா வெங்கும் மகிழ்வு அல்லது சந்தோஷம் நிறைந்திருக்கும். அபபொழுது தான் நமது நாடு பண்டைப் பெருமையும் புகழையும் மறுமுறை பெற்று விளங்கும்." இவ்வாறு பிரசங்கம் செய்தனர்.

மேற்குறித்த விஷயங்களைக் கவனமாய்ப் படிக்குமெவர்க்கும் மாது ஸ்ரீ பெசண்டம்மையார், ஸ்ரீகாந்தியடிகள் ஆகிய இவ்விருவர்களுடைய உயர்வும் நெறியும் இனிது விளங்கும். ஆயினும், குறை கூறுந்தொழிலே பெருந்தேசத் தொண்டெனக் கொண்டிருக்கும் சிலர்க்கு மாத்திரம் அவை ருசுவாகமாட்டா. ஸ்ரீகாந்தியடிகளால் வாயாரப் புகழப் பெற்ற மூர்த்தியின் அருமைதானென்னே! இஃது சாமானியர்க்கு விளங்குமோ ?

சத்தியாக்கிரகக் கிளர்ச்சி தொடங்கப் படுவதற்குச் சற்று முன்வரை இந்திய வுலகத்திலுள்ள எவராலும் அம்மையார் நன்கு மதிக்கப் பெற்று வந்தார். அப்பொழுது அவரைப் போற்றாதவர் மிகச்சிலரே. சத்தியாக்கிரக விரதங்கொண்டும் உண்மைச் சத்தியாக்கிரகத்தை யப்பிய சிக்க முடியாத ஆயிரக கணக்கான ஜனங்கள் அதைச் சார்ந்து பெருமுழக்கமும் ஆரவாரமுஞ் செய்தனர். இதனை அம்மையார் கண்டனஞ் செய்த பொழுது, அவர்கள் தூஷணையும் கண்டனமும் மிகவும் பலபட்டன. நேற்றுவரை அன்பர்களாயிருந்த நண்பர்கள் யாவரும ஒன்றாய்த் திரண்டு அம்மையாரைத் திட்டினர். பலவிடங்களில சத்தியாக்கிரகமும் துராக்கிரகமாய் விட்டது. அம்மையார் அதனையும் எதிர்த்து போராடினார். சத்தியம், கடமை இவற்றையே கடைப் பிடித்தொழுகி தாம் பெரும்பாடு பட்டுச் சமபாதித்த வியாபகத்தையும் ஜன சமூகத்தின் விசுவாசத்தையும சத்தியத்திற் கெனவும் கடமைக கெனவும் தியாகஞ் செய்தார். இஃதன்றோ துறவறம! இஃதனறோ தீரம்! இஃதன்றோ அன்பு! இஃதன்றோ கைமமாறொன்றும் எதிர்பாராத கைங்கரியம்! இவரன்றோ நமது தலைவர்! இவரைப் புகழ்ந்த காந்தியடிகளன்றோ சத்தியாக்கிரகி! சுருங்கக் கூறின, இதனைப் பற்றி விரித தெழுத ஓர் டாகூரடிகளே வேண்டும! எனது புன் மொழிகள சிறிதும் போதியவாகா,

பஞ்சாபகேசன்.

# அன்னிபெஸண்ட் அம்மையாரைப்பற்றிய அறிவிப்பு.

---

மாது ஸ்ரீ பெஸண்ட் அம்மையாரவர்கள் நம்தேசத்தவர்களின் முன்னேற்றத்திற்காக மதம், ஆசாரம் நாகரீகம், ராஜரீகம் முதலிய பல சீர்திருத்தங்களில் விடாமுயற்சியுடனுழைத்து வருகின்றன ரென்பதை யாவருமறிவார்கள். ஆயினும் பிரஹ்மஞான சங்கத்திற் சேர்ந்தவர்களில் சிறுபாலரும் சேராதவர்களிற் பெரும்பாலரும் அவ்வம்மையாருடைய செய்கைகளில் ஐயமுற்று அவரவர் தத்தம் சித்தத்திற் கேற்றவாறு குறை கூறுகின்றனர்.

இப்பிரஹ்மக்ஞான சங்கத்தைப் பற்றியும் அதற்காதி கர்த்தர்களாயுள்ள மகரிஷிகளைப் பற்றியும் இவ்வன்னிபெஸண்ட் அம்மையாரைப் பற்றியும் நம் சாஸ்திர வாயிலாக ஆதாரங்கள் உள்ளன. இதை நான் நெடுநாளைக்கு முன்னமே கேள்வியுற்றிருப்பினும், சமீப காலத்தில் தெரிந்து கொண்ட சில விஷயங்களை இங்குக் கூறுகிறேன்.

சில தினங்களுக்கு முன் பிரஹ்மக்ஞான சங்கத்தின் திரிசிரபுரக்கிளைச் சங்கத்தின் அங்கத்தினர்களுள் ஒருவராகிய பென்ஷன் போலீஸ் டிப்டி சூபெரிண்டெண்டெண்ட் யம். யஸ். பார்த்தசாரதி ஐயங்கார் அவர்கள் தன் பௌத்ரியின் ஜாதகத்தை இப்போது திரிச்சிராப்பள்ளி ஜில்லாவைச் சேர்ந்துள்ளதான கருவூருக் கடுத்த புலியூரிலிருக்கும் மைசூர் சமஸ்தான ஆஸ்தான ஜோஸியர் ஒருவரிடம் காட்டினபோது அஜ்ஜோஸியர் தம்மிடமுள்ள சுக்கிரநாடி யென்னும் ஏட்டுச் சுவடியில் வரையப்பட்டிருப்பதான அஜ்ஜாதகத்தைத் தேடிப்பார்த்தெடுத்து அதற்குக் கூறப்பட்டிருக்கும் பலாபலன்களை அதிலிருந்து படித்துக் காட்டினர். நடப்பில் அனேக விஷயங்கள் அதில் கூறியதற்கு ஒத்திருந்தன. அதில் அக்சிறுமியின் பாட்டன்,

தகப்பன் முதலியோர்களுக்கும் பலன் கூறப்பட்டிருந்தது. பாட்டனருடைய சரித்திரத்தைக் கூறுங்காலத்தில் அவர் பிரஹ்மக்ஞான சங்கத்தில் மெம்பராகச் சேருவாரென்றும்; அச்சங்கத்திற்கு ஆதிகர்த்தர்களான மகரிஷிகள் இருவர் என்றும் அவர்களிருவரும் இமோத்கிரியில் தவஞ் செய்து கொண்டிருக்கிறார்கள் என்றும் அச்சங்கத்திற்கு அகார பகார நாமதேயமுள்ள ஹூணஸ்திரீ தலைமை வகிப்பாளென்றும் அவள் முன் ஜன்மத்தில் கங்கா நதிக்கரையில் தவஞ் செய்து கொண்டிருந்த யோகி என்றும்; அவள் முன் ஜன்மத்தில் தவஞ் செய்து கொண்டிருந்த இடத்திலேயே இப்போது கலாசாலை ஒன்று ஸ்தாபிப்பாளென்றும் அவள் ஹூணஸ்திரீயாகப் பிறக்க காரணமென்னவெனில், முன் ஜன்மத்தில் கங்கா நதிக் கரையில் தவஞ் செய்து கொண்டிருக்கும்போது அவ்வழியாகத் தினந்தோறும் உலவுவதற்காகப் போய்க் கொண்டிருந்த ஐரோப்பிய தம்பதிகளைக் கண்ணுற்று அவர்கள் தேசத்தை தன் யோக சக்தியால் போய் பார்த்தனரென்றும் அத்தேயத்தில் வசிக்கவேண்டுமென்றும் அவா மிகுந்திருந்ததால் இப்போது அங்கு அவதரித்திருக்கின்றனரென்றும் கூறப்பட்டிருக்கிறது.

அன்றியும் இந்த ஜன்மத்தில் அவர் உலகத்துக்காக உழைக்கும் விஷயங்களைப் பற்றியும் சிறிது காலத்துக்கு முன் உலகத்தாருக்கே ஒரு பெரிய மனக் குழப்பத்தை உண்டு பண்ணியதான நாராயணய்யர் கேசு விஷயத்தைப் பற்றியும் அதில் கூறப்பட்டிருப்பதோடு அவரைப் பற்றிய மற்ற விஷயங்களைத் தெரிந்து கொள்ளவேண்டுமானால் அவருடைய ஜாதகத்தைப் படித்து அதிலிருந்து தெரிந்து கொள்ளும்படி எழுதப்பட்டிருந்தது.

சுக்கிரநாடி என்னும் ஜோதிஷ சாஸ்திரம் பேர்போன கிரந்தமென்று அறியாதார் ஒருவருமிலர். அப்புஸ்தகம் ஏட்டுச் சுவடிகளில் 100 புத்தகங்கள் அடங்கியதும் ஸம்ஸ்கிருத பாஷையில் சுலோகங்களாக எழுதப்பட்டுள்

ளதுமாக விருக்கிறது. இந்துக்களாகிய நம்மால் அருமையாகவும் சிரேஷ்டமாகவும் நினைக்கப் பட்டிருக்கும் இச் சாஸ்திரத்தில் தீர்க்க தரிசிகளான மகரிஷிகளால் அவ்வம்மையாரைப் பற்றி வரையப் பட்டிருக்குமாயின் இனியும் அவரைப் பற்றி நாம் சந்தேகப்படுவது நியாயமாகுமா? பகவத் கீதையை முக்கிய சாஸ்திரமாகப் போற்றும் நாம் அதில் கூறியிருப்பதான

வாஸாம்ஸி ஜீர்ணாநி யதா விஹாய நவாநி க்ருஹ்ணாதி
நரோऽபராணி । ததா ஶரீராணி விஹாய ஜீர்ணாந்ய
ந்யாநி ஸம்யாதி நவாநி தேஹீ ॥
யம் யம் வாபி ஸ்மரந் பாவம் த்யஜத்யந்தே கலேவரம் ।
தம் தமேவைதி கௌந்தேய ஸதா தத்பாவபாவித꞉ ॥

அதாவது—ஒருவன் கிழிந்து போன பழய வஸ்திரங்களை எறிந்துவிட்டு புதிய நல்ல வஸ்திரங்களைக் கைக்கொள்வது போல ஜீவன் மலினமடைந்த சரீரத்தை விட்டு புதிய நல்ல சரீரத்தைக் கைக்கொள்ளுகிறான்; மரணமடையும்போது எவ்வெவ்விதமான இச்சையை பிரதானமாகக் கொண்டிருக்கிறார்களோ அவ்வவ்விச்சையின் பூர்த்தியை அடுத்த ஜன்மத்திலடைகிறார்கள் என்னும் வாக்கியங்களை மறந்து விடலாமா?

இவ்வுலகத்துக்காகப் பாடுபடும் அவ்வம்மையார் இதுவரை தம் சுய நம்மையைக் கருதி எக்காரியத்தைச் செய்திருக்கின்றனர்? அவ்விதம் எடுத்துக்காட்டுவதற்குச் சென்ற சுமார் இருபத்தைந்து வருஷங்களாக அவ்வம்மையார் செய்துவரும் காரியங்களில் ஒன்றையாவது காணோமே. இவ்வளவு நீண்டகாலம் அநுபவசித்தமாகத் தெரிந்திருந்தும் ஏனோ வீணில் தூஷித்துப் பாவத்தைத் தேடிக்கொள்ள வேண்டும். சிலர் அவ்வம்மையார் அனேக சங்கங்களைப் புதிது புதிதாக ஏற்படுத்தி அவைகளுக்கெல்லாம் தான் அக்கிராசனராகவேண்டுமென்னும் ஆசையுள்ளவர் என்கின்

றனர். அவர் பல சங்கங்களை ஏற்படுத்தியிருப்பதும் அவைகளிற் சிலவற்றிற்கு அக்கிராசனராயிருப்பதும் உண்மையே. ஆனால் அவ்வம்மையாருக்கு அதனால் உண்டாகும் பலன் யாது? பெருமையென்கிறீர்களா? அப்படியானால் பெருமையை உத்தேசித்து மட்டும் இவ்வுலகத்துக்கு உழைத்தவர்கள் உங்களில் யாவர்? நாடு முழுவதும் கீர்த்தி பெற்றிருந்த ஸ்ரீமான் கோக்கலே இவ்வம்மையாரிடம் எவ்விதமான அன்புள்ளவராயிருந்தனர் என்பதை அறிவீர்களா? அத்தகையவராலேயே மானிக்கப்பட்டிருப்பின் நாம் அவரைத் தூற்றல் நியாயமா? அன்றியும் எதைக் குறித்து இவ்விதமாகப் பல சங்கங்களை ஏற்படுத்துகின்றனர் என்பதை உற்று யோசித்தீர்களா? நானுகை ஊகிக்கக் கூடிய மட்டில் அதன் கருத்தை வெளியிடுகிறேன்.

தாமஸ குணத்தால் மூடப்பட்டிருக்கும் நம்மை அதிலிருந்து சிறிது சிறிதாகக் கரையேற்றும் பொருட்டு, நடக்கப்பழகும் சிறு குழந்தைக்கு அதன் தாயானவள் புதிய விளையாட்டுக் கருவியை அதன் முன் காட்டி அதை நடக்கப்பழக்குவதுபோல இவ்வம்மையார் புதிது புதிதான சங்கங்களை ஏற்படுத்தி நமக்கு உற்சாகமுண்டுபண்ணி வேலை செய்யும்படி தூண்டுகின்றனர். அதில் நாம் சிறிது காலம் சுறுசுறுப்புடன் வேலை செய்து பிறகு அதில் நமக்கு சிரத்தை குறைவுபடும் போது வேறொன்றை ஏற்படுத்தி அதில் வேலை செய்யும்படி தூண்டுகின்றனர். இப்படிச் செய்வதற்கெல்லாம் காரணம் நாம் ஆழ்ந்துகிடக்கும் தாமஸ குணத்திலிருந்து வெளிப்பட்டு லோகத்துக்குப் பாடுபட வேண்டும் என்னும் கருத்தேயன்றி வேறல்ல. நாம் எந்தக் காரியத்தையாவது விடாமல் பிடிவாதமாகவிருந்து செய்து முடிக்கிறோமா? அப்படிச் செய்து முடிப்பவர் நம்மில் எத்தனை பேர்? நூற்றில் ஒருவர் உண்டா? அல்லது ஆயிரத்தில் தான் ஒருவருண்டா? வெளிக்கு மட்டும் "வாசாகைங்கரியமன்றி" என்று தாயுமானார் கூறியபடி

படாடோபத்தோடு பேசுகிறோமே யன்றி உண்மையில் உலகத்துக்கு உழைக்கிறவர்கள் மிக்க சிலரே.

சகோதரர்களே! நண்பர்களே! இவ்விஷயத்தை நன்காராயுங்கள். அநியாயமாக வீண் பழிகூறிப் பாபத்திற்குள்ளாகாதீர்கள்.

எம். சாமிநாதையர்.

---

## சமாசாரம்;

சென்ற ஜூலை மாதம் 19, 20உகளில் தஞ்சைமாநகரில் தமிழ் ஜில்லா பிரஹ்மஞான 'பெடரேஷன்' கூட்டம் நடந்தது. அவ்வமயம் ஸ்ரீமான் பி. சஞ்சீவராவ் அவர்கள் எம். ஏ. அக்கிராசனம் வகித்தார்கள். தமிழ் ஜில்லாக்களிலிருந்து அநேகம் அங்கத்தினர்கள் வந்திருந்தனர். 19உ காலையில் அக்கிராசனர்க்கு ஒரு உபசாரப் பத்திரிகையானது வாசிக்கப்பட்டது. அதற்கு அவர் விடையளித்த பின்னர், மதுரை வக்கீல் ஏ. அரங்கசாமி ஐயர் அவர்கள் பிரஹ்மஞானமும் வருங்கால நாகரீகமும் என்ற விஷயத்தைப்பற்றி உபந்யாசம் செய்தனர். அன்று மாலையில் நடந்த கார்யாதிச் சந்திப்பில் முக்கியமான தீர்மானங்கள் பெறப்பட்டன. தமிழ் ஜில்லாக்களை மூன்று பாகங்களாய்ப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் ஒரு தனி பெடரேஷன் கூட்டம் நடத்தவேண்டுமென்று தீர்மானிக்கலாயிற்று. தஞ்சை, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு, சென்னப்பட்டணம் ஜில்லாக்கள்—வடபாகம்; திருச்சினாப்பள்ளி, மதுரை, ராமநாதபுரம், புதுக்கோட்டை—தென் பாகம்; கோயமுத்தூர், நீலகிரி, சேலம், வடஆர்க்காடு—மேற்கு பாகம்; ஆக மூன்று பாகங்கள். தஞ்சை ஜில்லாவை 5 பாகங்களாகப்பிரித்து ஒவ்வொன்றுக்கும் ஒரு காரியதரிசி நியமித்து அவர்கள் அந்த ஜில்லாவில் பிரஹ்மஞானத்தைப்பரவச்செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர். அன்று மாலை அக்கிராசனர் "பிரஹ்மஞானமும் கல்வியும்" என்ற விஷயத்தைப் பற்றி அரிய உபந்யாசம் செய்தனர். மறுநாளில் உதயதிசை நக்ஷத்திர சங்கத்தாருக்காக ஒரு உபந்யாசமும் ஸ்திரீகளுக்கு ஒரு உபந்யாசமும், கடைசியில் மகாத்மாக்களும் அவர்களை அடையும் விதமும் என்ற விஷயத்தைப்பற்றி அக்கிராசனரால் ஒரு உபந்யாசமும் நடைபெற்றன.

# அமெரிக்கா பிரஹ்மஞான சபையின் சுறுசுறுப்பு.

---

யுத்த சம்மந்தமாக அமெரிக்கா பிரஹ்மஞான சபையார் வெகு நன்றாய் வேலை செய்திருக்கிறார்கள். 1918ஹு மேமீ தொடங்கி யுத்தம் நிற்கும் வரை நடந்த வேலையை அவர்களது அறிக்கைப் பத்திரத்தினின்று இங்கு எடுத்துக்கூறுவாம்.

உலகத்தின் முழுவதும் பிரஹ்மஞானமானது பரவச் செய்ய முயற்சி செய்திருக்கிறது. பிரஹ்மஞானத்தைப் பற்றி அநேகமாயிரம் பேர் முதன் முதலாய் அறிவிக்கப் பட்டிருக்கிறார்கள். 9 புதுக்கிளைச் சபைகள் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. அநேகம் புது அங்கத்தினர்கள் சேர்ந்திருக்கின்றனர். அதினால் பொதுத்தொகையும் விருத்தியாயிருக்கின்றது. 1516 டாலர் புஸ்தகங்கள் விற்பனையாயிருக்கின்றன. குருடர்கள் புஸ்தகங்கள் 110 டாலர்க்கு விற்கப்பட்டிருக்கின்றன. பிரஹ்மஞான அறிவைப் பரவச் செய்வதில் ஊக்கம் மிகுந்திருக்கின்றது.

அமெரிக்கா தேச அங்கத்தினரை வேண்டிக்கொண்ட உடன் அவர்கள் வெகு ஊக்கமாய் முன் வந்து 50,000 டாலர் உதவி செய்வதாய் வாக்களித்திருக்கின்றனர். தினம் நூற்றுக்கணக்கான டாலர்கள் வந்து விழுந்துகொண்டிருக்கின்றன.

240, 700 துண்டுப் புஸ்தகங்கள், துண்டுப் பத்திரிகைகள் செலவாயிருக்கின்றன. (1) தியாசபியால் உனக்கு உண்டாகும் நன்மை என்ன? (2) சண்டையின் உள் தத்துவம். (3) பயத்தை ஒழிப்பது எங்ஙனம்? (4) நாம் உன்னதஸ்திதிக்கு வருவதெப்படி? என்ற 4 பத்திரிகைகளை அச்சிட்டு அனுப்பப்பட்டது. யுத்தரங்கங்களுக்கும், அநேகமாயிரம் வீடுகளுக்கும் மேற்கண்ட பத்திரிகைகள் அனுப்பப்பட்டன.

"ஸத்குருசரண நிழலில்" என்ற அரிய புஸ்தகத்தைச் சிறு புஸ்தகமாய் அச்சிட்டு, 10,000 பிரதிகளை யுத்த வைத்தியசாலைகளில் இனமாகக் கொடுக்கப்பட்டுவருகின்றது.

மேற்கூறிய புஸ்தகத்தைக் குருடர்கள் படிப்பதற்காக அச்சிட்டு யுத்தத்தில் கண்ணை யிழந்த யுத்த வீரர் ஒவ்வொருவருக்கும் ஒன்றாக கொடுக்கப்பட்டது. தோற்றுத் துணைவர்கள் என்ற புஸ்தகத்தில 20 புஸ்தகங்களும் அவர்களுக்சென்று வாங்கி வைத்தியசாலையின் புஸ்தகாலயததில வைக்கப்பட்டுள்ளன.

யுத்த அதிகாரிகளும் ஆஸ்பத்திரி அதிகாரிகளும் சந்தோஷமாக வேண்டிய உதவிகளைச் செய்தார்கள். பிரஹ்மஞான சபையார் அதனால்தான் மேற்கூறிய காரியங்களைச் செய்ய முடிந்தது. ஒரு தளகர்த்தர் 15 மைல் கடந்து வந்து ஒரு உபந்யாசம கேட்டார்.

நம்முடைய இந்தியச்சபைகளின் ஊக்கம் எங்கே? அமெரிக்கர்களின் ஊக்கம் எங்கே? மரணபயம் வேண்டாம் என்ற புஸ்தகததை அநேகம் பிரதிகளாக வாங்கி மரணத்தால் துக்கித்து மனமுறிந்து போயிருக்கும் ஸ்திரீபுமாரகளுக்கு இனமாய்க் கொடுத்து உதவினுல் பெரும் புண்ணியமுண்டல்லவா? ஏன நமமுடைய தமிழ் அங்கத்தினரும் மற்றவரும் செய்யக்கூடாது? இப்போது எவ்வளவு பேர் வியாதிகளால் உயிர் இழக்கிறார்கள். அவர்களுடைய மனைவிமாரும், புருடன்மாரும, பிள்ளைகளும் பெண்களும் எவ்வளவு பரிதபிக்கின்றனர்! அவர்களுக்கு ஆறுதல சொல்ல இப்புததகம் எவவளவு உபயோகமாகும். நேயர்கள் ஒவவொருவரும் சில பிரதிகளை வாஙகி துக்கத்திலாழ்ந்தவர்களுக்கு இனமாய் அனுப்புவது பெருமதாமமாகும்.

---

[illegible]கமெடலகள் ச[illegible]

# ஜவுளிவியா[illegible]

## மதுரை.

### ரூ. 1 முதல் 1000 ரூ. வரையுள்ள ஜவுளி தினுசுகள் விற்பனைக்குத் தயார்.

நம்முடைய ஜவுளிக்கடையில் காசி பனாரஸ், அம்மாப்பேட்டை, உள்ளூர், பெங்களூர், ஆரணி, காஞ்சிபுரம், கல்கத்தா, பம்பாய், கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சினுப்பள்ளி இன்னும் அநேக ஊர்களிலிருந்து தருவிக்கப்பட்ட பட்டும் ஜரிகையும் கலந்த உயர்ந்த சேலைகள் ரூ. 50 முதல் ரூ. 1000 வரையிலும முகூர்த்தப்பட்டு சோமன ஜோடிகள் ரூ. 10 முதல் ரூ. 150 வரையிலும் ரவிக்கை தினுசுகள் ரூ. 2 முதல ரூ. 100 வரையிலும் இன்னும் அநேக புது தினுசுகளும் ஏராளமாய்த் தயார்செய்து வைத்திருக்கிறோம். ஆகையால் வேண்டியவர்கள் நமமுடைய கடையில் வந்து பார்த்து வாங்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தவிர குறைந்த விலையும் கெட்டிச்சாயமுமுள்ள நாட்டு சேலைகள், துப்பட்டாக்கள், வேஷ்டி ஜோடிகள் முதலிய அநேக தினுசுகள் ஏராளமாயிருக்கின்றன.

ஹெட் ஆபீஸ்,
கீழவெளி வீதி.

பிராஞ்சு,
மேலக்கோபுர வாசல்.

மதுரை.

எண்ணிலாக்குணங்கள் [illegible]
[illegible]ந்த ஜின்டானை இப்போதே உபயோகியுங்கள். எல்லாக் காலத்திலும் யாவராலுமே நன்கு மதிக்கப்பெற்று நாடெங்கும் பரவி பல பல வியாதிகளைக் கண்டித்தும் ஆரோக்கியத்திற்கும் ஆனந்தத்திற்கும் கைகண்ட முக்கியவிசேஷ குளிகைகள். இன்புளுயென்சா முதலிய கொடிய தொத்து வியாதிகளை அணுக வொட்டாமல் தடுப்பதற்கு இம் மாத்திரைகள் நிரம்பவும் குணமானவைகள்.

யாவரும் சுலபத்தில் அடையவேண்டி எல்லாக் கடைகளிலும் வியாபாரிகளிடத்திலும் எப்போதுமே விசாரிக்கப் பெறலாம் விலையோ சரசம்.

380 மாத்திரையும் கண்ணாடி பதித்த அந்தமான டப்பியுள்ள பாக்கெட் ரூ 1. 90 மாத்திரையும் சாதா டப்பியுடன் பாக்கெட்டுக்கு 4 அணா. 20 மாத்திரை பொட்டணம் 1 அணா.

ஹோல் ஏஜண்டுகள்:—

## எஸ் வைத்தியா அண்டு கோ

மதராஸ்.

பிராஞ்சிகள்:—திருச்சிக்கோட்டை & பங்களூர் ஸிடி. & கொழும்பு

N. B. ஸகல குடும்ப மருந்துகள், பேடெண்டுகள், டாயிலட்கள், பாலாமிருதம், மேலான பன்னீர், பல்பொடி, கூந்தல் தைலம், இங்கிலீஷ் எஸ்ஸென்ஸ், பித்தளை மெழுகு வத்தி ஸ்டாண்டுகள், முதலிய பலவகை சுதேசிய சாமான்களுக்கும் ஏஜண்டுகள்.

எங்கள் மதுரை ஏஜண்டு:—

**V. சின்னகிருஷ்ண நாயுடு,**
ஸ்ரீ கிருஷ்ண ராஜா அண்டுகோ, மேலக்கோபுர வீதி, மதுரை